ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

16.06.2010 - மலர் 07, இதழ் 15



## டைனோசர்கள் அழிந்ததற்கான காரணம் கண்டுபிடிப்பு

## சர்வதேச 'தந்தையர் தினம்'

ஜூன் 20

விலை ரூபா 15/-

## திசையறி கருவியின் அறிமுக வரலாறு



தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கத்தோலிக்கருக்கு விதிக்கப்பட்ட தடை

இரண்டாம் இராஜசிங்க மன்னனுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதி எதுவும் கண்டி பிரமுகர்கள் வசம் இருக்கவில்லை. இரண்டாம் விமலதர்மசூரிய மன்னனுக்கு அது பெரும் குறையாகத் தென்பட்டது. இதனால், அவர் சமாதானப் பேச்சுவார்த்தையை இடைநடுவில் நிறுத்தினார். தான் தனக்கு மிக நம்பிக்கையான கொழும்பு ஆள்பதியுடன் இது குறித்து மேலும் பேச்சுவார்த்தை நடாத்துவதாக கூறினார். தூதுவரை மீண்டும் திருப்பி அனுப்பினார்.

இதற்கிடையில், ஒல்லாந்த வர்த்தக சங்கம் தவறான வழிக்குத் திசைதிரும்பியது. ஆள்பதியும் பேச்சுவார்த்தைகளைக் கைவிட்டார். நாட்டின் எல்லைக்குள் இருந்த கோரளைகளில் இருந்து ஒல்லாந்தர்கள் வெளியேற வேண்டும் என மன்னர் கட்டளையிட்டார். அவரால் நியமிக்கப்பட்ட திசாவைகளால் அப்பிரதேசம் கைப்பற்றப்பட்டது. எனினும், கிழக்குக் கரையோரப் பிரதேசத்தில் வர்த்தக சங்கத்தின்கீழ் வாழ்ந்த மக்கள் வரி செலுத்த மறுத்தனர். ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களின் உரிமைகளைக் கைவிடுவதில்லை எனவும் அவர்கள் தீர்மானித்தனர்.

ஒல்லாந்தர் ஆட்சி செய்த பிரதேசங்களில் பௌத்தர்களும் இந்துக்களும் முஸ்லிம்களும் கத்தோலிக்கர்களும் வாழ்ந்தனர். ஒல்லாந்தரோ சீர்திருத்த கிறிஸ்தவ சபையைப் பின்பற்றினர். அம்மதம் இலங்கையில் பரவப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். அதனை மனதில் கொண்டு ஒல்லாந்தர் முதலில் கத்தோலிக்க தேவாலயங்களையும் பாடசாலைகளையும் கைப்பற்றினர். அதன்பின், கத்தோலிக்க சமயக் குருமார்களையும் சிறைப் பிடித்தனர். சிறைப்பிடித்த குருமார்களுக்கு மரண தண்டனை வழங்கினர். கத்தோலிக்கர்களின் ஞான ஒழுக்கம், (கத்தோலிக்க மத வழிபாடுகளுக்கென தம்மை ஒதுக்கி தேவாலயங்களில் பாடல்களைப் பாடவும் ஞான ஒழுக்கம் மற்றும் தியானம் போன்றவற்றில் முழுமையாக ஈடுபடுதல்) கத்தோலிக்க தேவாலய நடவடிக்கைகள் மற்றும் திருமண வைபவங்களையும் தடை செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை 20,111 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்



பல்கலைக்கழகங்களில் 2009/2010 கல்வி ஆண்டுக்காக மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற்கான Z-Score விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் கடந்த 7 ஆம் திகதி வெளியிடப்பட்டன.

அதன்படி, 2009/2010 கல்வியாண்டின் 91 பாடநெறிகளுக்காக 20,111 மாணவர்களை அனுமதித்துக்கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

Z-Score விபரங்களை வெளியிடுவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணையகத்தில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மானியங்கள் குழுவின் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கையைத் தவிர, விசேட மற்றும் மேலதிக அனுமதியின்கீழ் சுமார் 1500-2000 வரையிலான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்வதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## அப்பா

நான் பிறந்தபோது....
முதல் வார்த்தை பேசியபோது....
தத்தித் தத்தி அடி வைத்தபோது....
முதலில் பாடசாலை சென்றபோது....
இப்படி,
என் ஒவ்வொரு வளர்ச்சிப் படியிலும்
அம்மா என்கூடவே இருந்துள்ளபோதும்
நீங்கள் இருக்கவில்லையே என்று
ஏங்கினேன் அப்பா!
ஆனால்,
அந்த வளர்ச்சிக்கான ஏணிப்படிகளாக
நீங்கள்தான் இருந்தீர்கள் என்பதை
உழைத்துக் களைத்து
இரவில் வீடு வந்து அசந்து தூங்கும்
உங்களில்
நான் கண்டேன் அப்பா!

-ஜிநு

## க.பொ.த (உ/தர) 'பொது சாதாரண' மாதிரி வினாக்கள் 'விஜய்' யில்....

### அடுத்தவாரம் முதல் எதிர்பாருங்கள்!

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சகல பிரிவு மாணவர்களும் (கலை, வணிகம், விஞ்ஞானம், கணிதம்) கட்டாயமாக $2^{1/2}$ மணி நேரத்திற்குரிய 'பொது சாதாரணப் பரீட்சை' (Common General Test) வினாப்பத்திரத்திற்கு விடையளித்தாக வேண்டும். இந்த வினாப்பத்திரத்தில் கணிசமான புள்ளிகளைப் பெறாவிட்டால், அது பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பையும் கேள்விக்குறியாக்கலாம்.

எனினும், மாணவர்கள் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்குப் பெரும்பாலான பாடசாலைகளில் பிரத்தியேகமாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதில்லை. அத்துடன், நேரசூசியிலும் இதற்கான நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதில்லை. எவ்வாறாயினும் இந்த வினாப்பத்திரம் அனைவருக்கும் பொதுவானது; கட்டாயமானது.

மாணவர்கள் சகல துறைகளிலும் ஆற்றல் பெறுவது சமூக வாழ்வுக்கு இன்றியமையாதது. எனினும், இலங்கையில் நடைமுறையில் இருக்கும் கல்வி முறையின்படி, பாடசாலைப் பாடங்களை மனனம் செய்வதிலுள்ள அழுத்தம் காரணமாக, மாணவர்களின் பொது அறிவுசார் விடயங்கள் குறைபாடுகளுடன் இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. எனவே, இக்குறைபாட்டை நீக்கும் பொருட்டு அறிவுசார் ஆற்றல்களையும் சிந்திக்கும் திறனையும் விருத்தி செய்யும் அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட்டதே பொது சாதாரண வினாப்பத்திரமாகும்.

இவ்வினாப்பத்திரம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்.

- **பொது விழிப்பு.**
- **பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல்.**
- **நியாயிக்கும் ஆற்றல் அதாவது பகுத்தாய்வு முறை.**
- **கிரகிப்பதற்கும் தொடர்பாடலுக்குமான ஆற்றல்.**

பொது அறிவு எனும் பொழுது அது தேசிய, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக் கருக்களினதும் மெய்மைகளினதும் விமர்சன ரீதியான விழிப்பாகவே அமைந்திருக்கும். இதற்கமைய, இவ்வினாப்பத்திரம் முன்னைய வருடங்களில் நிகழ்ந்த பொருளாதார, அரசியல், சமூக, கலாசார, சட்ட, விஞ்ஞான, விளையாட்டு, தொழில்நுட்ப துறைகளில் ஏற்பட்ட முக்கியம் வாய்ந்த எண்ணக் கருக்கள், நிகழ்வுகளைப் பற்றிய விழிப்பைச் சோதிக்கும் வினாப் பத்திரமாக அமைந்திருக்கும்.

அத்துடன், சமகால நிகழ்வுகளை உள்ளடக்கிய இத்தொடரானது புவியியல், பொருளியல், வணிகம் போன்ற பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கு உதவியாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, அடுத்த வாரம் தொடக்கம் மேற்படி வினாக்கள் 'விஜய்'யில் வாராந்தம் வெளியாகும். இப்பரீட்சைக்கு உங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள அதனை பயன்படுத்திக்கொள்ளுங்கள். **(ஆசிரியர்)**

### தமிழ் மொழித்தின

## தேசிய மட்டப் போட்டிகள் யாழ். நகரில்....

2009 ஆம் ஆண்டுக்கான நாடளாவிய தமிழ் மொழித்தினப் போட்டிகளை எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் போட்டியாளர் பதிவுகள் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றிலேயே போட்டிகள் நடைபெறவுள்ளன.

19 ஆம் திகதி எழுத்தாக்கப் போட்டி உட்பட ஏனைய தனிப் போட்டியாளர் நிகழ்ச்சிகளும் 20 ஆம் திகதி குழுநிலைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

## ஞாயிறு, போயா தினங்களில் டியூஷன் வகுப்புக்கள் தடை

### முதலமைச்சர்கள் தீர்மானம்

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வேளையிலும் போயா (பௌர்ணமி) தினங்களிலும் தனியார் வகுப்புக்களை நடாத்துவதைத் தடை செய்வதற்கு முதலமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிள்ளைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறிப் பாடசாலைகளுக்குச் செல்லல் மற்றும் போயா தினங்களில் மதரீதியான அனுஷ்டானங்களில் ஈடுபடுதல் போன்ற தேவைகளைக் கருத்தில்கொண்டே இந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஐந்து மாதங்களில் 15,000 டெங்கு நோயாளர்கள்

**இவ்வாண்டின் கடந்த ஐந்து மாதங்களுக்குள் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் டெங்கு நோயினால் சுமார் 15,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதோடு, அவர்களில் 85 பேர் உயிரிழந்துள்ளனர் என கொழும்பு தொற்று நோய்ப் பிரிவு அறிவித்துள்ளது.**


**கடந்த தினங்களில் நிலவிய மழையுடன்கூடிய காலநிலை மாற்றத்தினை அடுத்து டெங்கு நோயானது தொற்றுநோய் போன்று பரவிச் செல்வதற்கான அபாயம் நிலவுவதாக தொற்றுநோய் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.**

**கொழும்பு, கம்பஹா, குருநாகல், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருவதாக தொற்றுநோய் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே,**



**தமது வீட்டுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கும்படியும் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான இடங்களை அழித்து விடும்படியும் பொதுமக்கள் கோரப்படுகின்றனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஆயிரக்கணக்கான தேனீக்கள் ஒன்றிணைந்து, பல்லாயிரக்கணக்கான மலர்களை முகர்ந்து, அவற்றில் உள்ள அமிர்தம், மகரந்தம் என்பவற்றை உறிஞ்சி, தம் பைக்குள் சேர்த்து, அதனை ரசாயன மாற்றமடையச் செய்த கலவையே தேன். சுத்தமான தேன்பளிங்கு போல் தெளிந்து முகம் பார்க்குமளவிற்குக் கண்ணாடி போல் காணப்படும். அதனைத் தொடாமல் அப்படியே சில மணித்தியாலங்கள் வைத்திருந்தால், கற்கண்டுபோல் உறைந்துவிடும் தன்மையுடையது**

# ஆரோக்கியத்திற்கு அருமருந்தான 'தேன்'

தேன் மற்றைய உணவுப் பொருட்களிலிருந்து வேறுபட்ட தன்மை கொண்டது. எந்த உணவுப் பொருட்களையும் வெகுநாட்கள் வைத்திருந்தால், என்றாவது ஒருநாள் அவை கெட்டுப்போய்விடுகின்றன. சில விரைவாகவும் சில நாட்கள் கடந்தும் கெட்டுவிடும் தன்மை கொண்டவை. ஆனால், தேனோ ஆயிரம் வருடங்களானாலும் கெடாமலிருக்கும் தன்மை கொண்டது.

## சத்துள்ள ஆகாரம்

தேனை மருந்தாக மாத்திரமன்றி, சத்துள்ள ஆகாரமாகவும் உபயோகிக்கலாம். தேனை சாப்பிடுவதனால் தேகாரோக்கியம் பெறுவதுடன், நீண்ட ஆயுளையும் பெறக்கூடியதாக இருக்குமென்று நம் முன்னோர்கள் கருதினர். இதனால்தான் அவர்கள் தேனைச் சிறந்த பானமாக உபயோகித்து வந்திருக்கின்றார்கள்.

இனிப்புக்காக முதன்முதலில் உரோமர் சர்க்கரை என்ற ஒரு பொருளைக் கண்டுபிடிக்க முன்னர், மத்திய தரைக்கடலை அடுத்துள்ள பிரதேசத்தினர் தேனையே உபயோகித்து வந்திருக்கின்றார்கள். சடலங்களை அழுகிப்போகாமல் நீண்ட நாட்கள் வரை பாதுகாப்பதற்காக எகிப்தியரும் ஆரியரும் தேனையே உபயோகித்து வந்திருக்கின்றார்கள்.

ஆதிகாலந்தொட்டு நெருப்புக் காய்ச்சல், உராய்வுக் காயங்கள், இரணங்கள் போன்றவற்றைக் குணப்படுத்துவதற்காகவும் தேன் உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது. குமட்டல், வயிற்றெரிவு என்பவற்றை இல்லாமல் செய்கின்ற தேன், வயிற்றினுள்ளே ஏற்படும் புண்களைக் குணப்படுத்துவதற்கும் உதவுகின்றது. தினமும் சிறிதளவு தேனை உட்கொண்டு வந்தால், வயிற்றுப்புண்ணுக்குக் காரணமான அமிலச்சத்தை இது குறைத்து, வயிற்றுப்புண்ணைக் குணமடையச் செய்துவிடும்.

நாட்பட்ட அஜீரணம், அளவுக்கதிகமாக ஆகாரம் உட்கொண்டமையால் ஏற்படும் மந்தம் என்பவற்றைப் போக்க இரண்டு அவுன்ஸ் தேனைச் சுத்தமான நீரில் கலந்து பருகிவந்தால், ஆகாரப் பை சுறுசுறுப்பாக வேலை செய்யவும், சமிபாட்டை ஏற்படுத்தவும் நல்ல பசியை உண்டாக்கவும் வழிசெய்யும். பெருங்குடல் நோயினால் அவஸ்தைப்படுபவர்களும் மெலிந்து ஒல்லியாகக் காணப்படுபவர்களும் சிறிதளவு தேனைப் பசும்பாலில் கலந்து காலையும் மாலையும் பருகி வந்தால் நரம்புகள் உறுதிபெற்று ஆரோக்கியம் அடையும்.



## இன்ப நித்திரைக்கு வழி

தேன் இருதய வளர்ச்சிக்கு உறுதுணையானது. தேன் சாப்பிடுவதனால், உள்ளம் தெளிவு பெறுவதோடு, இருதய சுத்திகரிப்பும் ஏற்படுகின்றது. தூக்கமின்மையால் துன்பப்படுபவர்கள், பசும்பாலில் தேன் கலந்து, நித்திரைக்குச் செல்லுமுன் பருகிவந்தால், இன்பமாக நித்திரை செய்யலாம்.

குழந்தைகளுக்கு சீனி கலந்த இனிப்புப் பதார்த்தங்களைக் கொடுத்து வருவதாலேயே அவர்களின் இளம் பற்கள் சொத்தை விழுந்து ஈறுகளின் தாக்கம் காரணமாக பல்வலி ஏற்பட்டு, இளம் வயதிலேயே அவர்கள் அவஸ்தைப்படுவதைப் பார்க்கின்றோம். குழந்தைகள் அடம்பிடிக்கும்வேளையில் தேனையோ அல்லது வீட்டில் செய்த தேன் கலந்த இனிப்புப் பதார்த்தங்களையோ கொடுத்து வந்தால் அவர்களின் பற்கள் பாதுகாக்கப்படும்.

தேன் உண்பவர்களின் உடல் அழகு பெறுவதுடன், சருமத்தில் சுருக்கங்கள் விழாமல் பாதுகாக்கின்ற சக்தியும் அதற்குண்டு. உடல் வன்மை, எழில், இளமை என்பவற்றை இதனால் பெற முடிகின்றது. முகத்தில் சுருக்கக் கோடுகள் உள்ள இடங்களிலும் கரும்புள்ளிகள் உள்ள இடங்களிலும் கொஞ்சம் தேனைத் தடவி, சில கணங்களின் பின்னர் வெந்நீரால் கழுவினால், முகம் வசீகரமாகும். தொண்டை வலி, தடிமன் உள்ளவர்கள் ஒருநாளைக்கு ஆறு தடவை வீதம் தேனைத் தடவினால் நோய் தீரும். அதிகாலையில், கண்களுக்கு மையிடுவதுபோல், தேனை உபயோகித்து வந்தால், கண்களில் பீளை கட்டாமலிருப்பதோடு, கண் நோயிலிருந்தும் காத்துக்கொள்ள முடியும் எனக்கூறப்படுகின்றது.

## இரத்தத்துக்கு ஊட்டம்


அன்றாடம் தேன் அருந்தி வந்தால், அது ஜீரணித்து இரத்தத்துடன் கலந்து நோய் அகற்றிச் சிறந்த வலுவையும் தேகாரோக்கியத்தையும் அளிக்கும். இரத்தத்திற்கு ஊட்டம் கொடுப்பதில் தேனுக்கு ஒரு சக்தி இருக்கின்றது. முக்கியமாக இரத்தத்தில் 'ஹீமோகுளோபின்' என்ற சத்துப் பொருளை தேன் அதிகரிப்பதால், இது விசேட பயன் தருகின்றது.

உலகில் தேன் ஒரு மேலான சஞ்சீவியாகவே கருதப்படுகின்றது. இதில் விசேடமாகக் கனிப்பொருட்கள், மெக்னீசியம், சுண்ணாம்பு, பொஸ்பரிக் என்பன காணப்படுவதாக மருத்துவ விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இதனால், தேனீ வளர்த்தலுக்கு உலக நாடுகள் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இலங்கையிலும் தேனீ வளர்த்தல் லாபகரமான ஒரு தொழிலாகக் கருதப்படுகின்றது. பொதுவாக தேன் எனும்போது நமது நாவில் நீர் ஊறத்தான் செய்கிறது. அதேபோல் தேனீ வளர்த்தல் லாபகரமான, இன்பகரமான ஒரு பொழுதுபோக்கு என்பதை நாம் உணர்ந்தால், சம்பந்தப்பட்ட தேனீ வளர்ப்பு ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள் மூலம் தகவல்களைப் பெற்று தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபடலாம்.


-ஐ.ஏ.சத்தார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தந்தையரை நன்றிகூர்ந்து கௌரவிப்பதற்காக கொண்டாடப்படும் தினமே 'தந்தையர் தினம்' ஆகும். அன்னையர் தினத்தை முழுமைப்படுத்தும் முகமாகவே இருபதாம் நூற்றாண்டுப் பகுதியில் தந்தையர் தினக் கொண்டாட்டம் நடைமுறைக்கு வந்தது.**





# "இவர்தான் என் தந்தை....!"

உலகின் 52 நாடுகளில் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையும் பிற நாடுகளில் வேறு பல தினங்களும் தந்தையர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இவ்வருடத்தில் இம்மாதம் 20 ஆம் திகதியன்று தந்தையர் தினமாக கொண்டாடப்படவுள்ளது.

கௌரவப்படுத்துவதற்கான யோசனையை முதன்முதலில் பரிந்துரை செய்ததாகக் கூறப்படுகின்றது.1909 இல் அன்னையர் தினமொன்றில் சமய போதனையைக் கேட்டுக்கொண்டிருந்தபோதே, தந்தையர் தினம் பற்றிய எண்ணம் அவருள் தோன்றியது. அதனை அடுத்து, 1910 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி சோனோரா தனது தந்தைக்காக ஒரு புகழுரையை

வொஷிங்டனைச் சேர்ந்த சோனோரா ஸ்மார்ட் டோட் என்பவர்தான் தந்தையரை



வழங்கி, அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் குறித்த தினமொன்றை தந்தையர் தினமாக கொண்டாடுவது நடைமுறைக்கு வந்தது.

பொதுவாக, அனைவருக்கும் அவரவர் தந்தையிடம் ஒருவித பயம் கலந்த மரியாதை காணப்படும். ஒருசிலர் தந்தையிடம் கதைப்பதற்கே பயப்படுவர். இன்னும் சிலர் தந்தை என்றாலே நடுங்குவர். இவ்வாறான நிலைக்குக் காரணம், தந்தையின் கண்டிப்பும் கட்டுப்பாடுமாகும். அளவுக்கதிகமான அன்பை வெளிக்காட்டினால் பிள்ளையின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற நோக்கத்தினாலேயே சில தந்தையர் மிகவும் கண்டிப்புடனும் கட்டுப்பாடுடனும் தமது பிள்ளைகளை அணுகுகின்றனர். ஆனால், இந்தக் கண்டிப்பும் கட்டுப்பாடும் பிள்ளையின் நலத்தைக் கருத்திற்கொண்டேயன்றி, வேறு எந்த காரணங்களுக்காகவும் இல்லை என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

இதேவேளை, தந்தையிடம் அதிக பாசம் வைத்துள்ள பிள்ளைகளும் நம்மில் இருக்கின்றனர். இதற்குக் காரணம், தந்தையரின்

## ஜூன் 20 தந்தையர் தினம்

பொறுப்புக்கள், கடமைகளை உணர்ந்து அதற்கேற்ப தங்கள் தந்தையரை அவர்கள் அனுசரித்து நடக்கின்றமை ஆகும்.பெரும்பாலும் எல்லா நேரங்களிலும் நம்முடன் நெருக்கமாக இருப்பது அம்மாதான். நமது மகிழ்ச்சி, துக்கம், பிரச்சினை என அனைத்தையும் பகிர்ந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பம் அப்பாவைவிட அம்மாவுக்கே அதிகமாக அமைகின்றது. இவற்றை வைத்து அப்பாவை வெறுத்துவிடக் கூடாது. பொதுவாக அம்மாவால் பிள்ளைகளுக்கு அன்பு, அரவணைப்பு என்பனவற்றை மட்டும்தான் பிரதானமாக வழங்க முடியும்.

ஆனால், குடும்பத்தில் உள்ளவர்களின் சகல தேவைகளையும் தடையின்றி வழங்க வேண்டிய பொறுப்பு ஒரு தந்தையையே சார்ந்திருக்கின்றது. அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு, ஆரோக்கியம், வளர்ச்சி என குடும்பத்தில் உள்ளவர்களை திருப்திப்படுத்த வேண்டிய பொறுப்பு தந்தையிடமே தங்கியுள்ளது என்பதை நம்மில் பலர் உணரத் தவறுகின்றனர். இந்த பாரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக இரவு - பகல் பாராது உழைக்கின்ற தந்தையரையும் நாம் காண்கின்றோம்.

எனவே, தந்தையிடமிருந்து அன்னையைப் போன்ற அன்பினையும் அரவணைப்பினையும் மட்டும் நம்மால் எதிர்பார்க்க முடியாது. தவிர, அதற்கும் மேலாக *பல்வேறு தேவைகளை அவரிடமிருந்து நாம் எதிர்பார்த்திருக்கின்றோம். அந்த தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிலைக்கு அவரை ஆளாக்கியிருப்பதும் நாம்தான் என்பதை ஒவ்வொரு பிள்ளையும் உணர்ந்துவிட்டாலே போதும்;* நம் நலனுக்காக தன் வாழ்நாட்களில் ஓய்வின்றி உழைக்கும் தந்தையரை அளவுகடந்து நேசிக்க ஒவ்வொரு பிள்ளையும் முந்திக் கொள்வர். அத்துடன் நின்றுவிடாது பெருமையுடன் கூறுவர் 'இவர்தான் என் தந்தை' என்று.

**உமா**

# கற்றல் சிறப்பாக அமைய.....

## கல்வி முகாமைத்துவம் - 07

### கற்றலுக்கான ஆலோசனைகள்




கற்றல் என்பது ஒரு படிமுறையான செயற்பாடாகும். அதனைக் குறிப்பிட்ட ஒழுங்கில், குறிப்பிட்ட நேரத்தில் எவ்வாறு செயற்படுத்த வேண்டும்? என்ற அறிவு எமக்குத் தேவை. அதனை அறிந்தால் மாத்திரமே சிறப்பாகக் கற்று, அதன் நல்வினையை அடையலாம். இங்கு கற்றல் சிறப்பாக அமைவதற்காக சில விடயங்களை நோக்குவோம்.

**1. முடிவினை அறிந்துகொள்ளல்: (Knowledge of Results)**

ஏதாவது ஒரு பாடம் அல்லது செயலினைக் கற்கும்போது அதன் முடிவில் நாம் எத்தனை தவறு செய்தோம்?, கற்றலுக்காக எவ்வளவு நேரத்தை எடுத்துக்கொண்டோம்?, கற்றலில் சரியான முறையினைக் கையாண்டோமா?, நாம் எவ்வாறு கற்றோம்?, எந்த சூழ்நிலையில் கற்றோம்? என்பன பற்றிய விளக்கம் அறியப்பட வேண்டும். அப்போதுதான் நாம் அடுத்த முறை அதே செயலினை அல்லது அது போன்ற ஏனைய செயலினைக் கற்க வேண்டிய தேவை வரும்போது சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும். எனவே, முடிவு பற்றி விரிவான விளக்கம் (Feedback of Knowledge of Results) தரப்பட வேண்டும். அதன் அடிப்படையில் அமையும் கற்றல் மிகவும் சிறப்பானதாக அமையும்.

**2. குறிப்பெடுத்துக் கற்றல்:**

நாம் கற்கும் ஏதாவதொரு விடயம் சிலவேளைகளில் பெரிய அளவினதாக காணப்பட்டால், அவ்விடயத்தைச் சுருக்கமாக குறிப்பெடுத்துக் கற்பது இலகுவான வழிமுறையாகும். ஏனெனில், அதே விடயத்தை மீண்டும் ஒருமுறை கற்க நேரிட்டால் ஏற்கனவே எடுத்த குறிப்புக்களை பார்வையிடுவதன் மூலமும் அவ்விடயம் நினைவூட்டுவதன் மூலமும் ஞாபகத்திற்கு வந்துவிடும். இதனால், நேரத்தை மீதப்படுத்திக் கொள்ளக்கூடியதாக அமைவதோடு, மேலும் புதிய விடயங்களையும் கற்றுக்கொள்ளலாம். நூல்நிலையப் புத்தகங்கள், பாட நூல்கள், விரிவுரைகள் என்பனவற்றிலிருந்து குறிப்புக்களை எடுக்கலாம்.



**3. இடைவெளி விட்டுக் கற்றல்: (Distributed Practice)**

எந்தவொரு பாடத்தையும் அல்லது செயலினையும் நீண்ட நேரத்துக்கு கற்றுக்கொண்டிருக்கும்போது மூளை களைப்படையும். இதன்போது மூளைக்கு ஓய்வு அவசியம். எனவே, தொடர்ச்சியாகக் கற்காமல் இடையிடையே கவனத்தை வேறுபக்கம் செலுத்துதல் வேண்டும். உதாரணமாக; தேநீர் அருந்துதல், சிறிது நேரம் தொலைக்காட்சி பார்த்தல் மற்றும் ஏனைய வேலைகளில் ஈடுபடல் போன்ற செயல்களைக் கடைப்பிடிக்கலாம். இவ்வாறு ஓய்வு எடுத்துப் படித்தோமேயானால், கற்றலுக்குரிய பாடம் மனதில் நிலைத்து நிற்கும். விட்டு விட்டுக் கற்றல் என்பது தொடர்ச்சியான கற்றலைவிடச் சிறந்ததாகும்.

**4. புலன்காட்சி அடிப்படையில் கற்றல்:**

கற்கும் பாடம் அல்லது செயல் மிக எளிதாக அமைய 'புலன்காட்சிக் கற்றல்' உதவுகிறது. புலன்காட்சிக் கற்றல் என்பது பாடத்தை மனதினால் புரிந்துகொண்டு, பாட விடயங்களுக்கிடையிலான தொடர்புகளை அறிந்துகொண்டு, பொருளினை உணர்ந்து கற்பதனைக் குறிக்கும். பாடங்களிடையே உள்ள தொடர்புகளை, வேறுபாடுகளை உணர்த்துவதால் அமையும் புலன்காட்சிக் கற்றல் முறைமை மிகவும் சிறப்பான கற்றலாக அமையும்.


**5. கல்வியில் ஆர்வத்தை அதிகரித்தல்:**

கற்றலைச் சிறப்பாக செயல்படத் தூண்டுவது கல்வியில் உள்ள ஆற்றலாகும். அந்த ஆர்வமே கல்வி நடத்தையை நிர்ணயிக்கின்றது. நாம் கல்வி கற்பதால் என்ன பயன்?, கற்பதனால் நமது எதிர்காலம் எவ்வாறு அமையும்?, எவ்வாறு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம்? போன்ற வினாக்களுக்கான விடைகளை ஒரு மாணவன் மனதில் நிறுத்தினால், அவனுக்கு கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். இது கற்றலில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தும்.


(தொடரும்...)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திசை காட்டும் தி




**பண்டைய மனிதன் பிரயாணம் செய்த திசையை அடையாளம் காண்பதற்காக அவன் சென்ற பகுதிகளில் நினைவில் இருத்திக்கொள்ளக்கூடிய முக்கியமான இடங்களைக் கொண்டு அடையாளம் கண்டான். அதன் பின்னர் ஓரளவு முன்னேற்றம் கண்ட காலப்பகுதிகளில் நட்சத்திரங்களின் உதவியுடன் சென்று திசைகளை அடையாளம் கண்டான். இன்று மனிதனுக்கு அவன் செல்லும் திசையை சரியாக அடையாளம் காண்பதற்கு உதவியாக திசையறி கருவி இருந்து வருகின்றது.**

## திசையறி கருவியின் வரலாறு

திசையறி கருவி எப்போது கண்டுபிடிக்கப்பட்டது என்பதை சரியாகக் கூறமுடியாது. ஆனாலும் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் இருந்து இந்த திசையறி கருவி பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

## சீனாவில்

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் சீனர்கள் அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்ப்பதற்கும் சுபமுகூர்த்தத்தைக் கண்டறியவும் அகப்பை உருவத்திலான காந்தச் சட்டம் ஒன்றைப் பயன்படுத்தியுள்ளனர். அந்த காந்தச் சட்டம் சுழலும் பக்கத்தை வைத்து அதிர்ஷ்டத்தைக் கணித்தனர். அந்தவகையில், 1000 வருடங்களுக்கு முன்னர் இந்த வழியில் சீனர்கள் திசையறி கருவியைக் கண்டுபிடித்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

## சரியான திசையறி கருவியின் பிறப்பு

சரியான திசையைக் காட்டும் கருவியொன்றைக் கண்டுபிடித்த பெருமை 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இத்தாலி நாட்டவரையே சாரும். அக்காலப் பகுதியில் அரேபியரும் திசையறி கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். 1187 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐரோப்பியரும் திசை காட்டும் கருவியைப் பயன்படுத்தியதற்கு சான்றுகள் உள்ளன. லீப் எரிக்கன் என்ற கடலோடி அமெரிக்காவை கடல் மார்க்கமாக சுற்றி வந்தபோது திசையறி கருவியைப் பயன்படுத்தியதாக சான்றுகள் உள்ளன.

## அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட மெற்றிக் கருவி

400 பாகை கொண்ட மெற்றிக் கருவியொன்று அமெரிக்கர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. இது கிழக்கு 100 பாகையிலும் தெற்கு 200 பாகையிலும் மேற்கு 300 பாகையிலும் வடக்கு 400 பாகையிலும் காட்டப்பட்டது. இதன்மூலம் திசையை இலகுவில் கண்டுகொள்ள முடிந்தபோதும் அக்கருவி பிரபல்யம் அடையவில்லை.

## திசைகாட்டியின் சிறப்பு

திசையறி கருவி மூலம் நாம் இலகுவாகத் திசையை அடையாளம் கண்டுகொள்ளமுடியும். திசைகாட்டிக் கருவியின் நகரும் ஊசி மிகவும் சிறியதாகும். பூமிக்கும் மையப் புள்ளியொன்று இருப்பதோடு, அப்புள்ளி உலகின் வடதுருவத்தில் கெனடாவுக்கு அண்மையாக அமைந்திருக்கின்றது. அதன் காரணமாக ஏனைய புள்ளியின் தென்துருவத்தை நோக்கிய நகர்வு காணப்படுகின்றது. இதனால், திசையறி கருவியின் முனையை எப்படித் திருப்பினாலும் அது வடதுருவத்தை நோக்கியே காட்டுவதாக அமைகின்றது.

## திசைகாட்டியில் 16 திசைகளும்

திசைகள் என்று கூறும்போது நாம் இலகுவில் 8 திசைகள் என்று கூறிவிடுகின்றோம். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்ற அடிப்படையில் நான்கு திசைகளாகும். அதன்பின்னர், அந்நான்கு திசைகளுக்கும் இடையில் வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு என்ற அடிப்படையில் நான்கு திசைகளுமாக நாம் அடையாளம் காணுகின்றோம்.

## ஆங்கிலத்தில் 16 திசைகள்

ஆங்கிலேய வழக்கில் திசைகள் 16 என்ற அடிப்படையில் அடையாளப்படுத்தப்படுகின்றது. அதன்படி, ஏற்கனவே சொல்லப்பட்ட எட்டு திசைகளுக்கும் மேலதிகமாக மேலும் எட்டு திசைகள் அடையாளப் படுத்தப்படுகின்றன.

## உப திசைகள்

இதில் வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடைப்பட்ட திசை வடகிழக்கு ஆகும். அந்த இரண்டுக்கும் இடைப்பட்ட திசை வட, வட கிழக்கு (North North East NNE) ஆகும். வட கிழக்கிற்கும், கிழக்கிற்கும் இடைப்பட்ட திசை வடக்கு, வட கிழக்கு (NNE) எனப்படும். கிழக்கிற்கும், தென் கிழக்கிற்கும் இடைப்பட்ட பகுதி கீழ் தென் கிழக்கு (ESE) ஆகும். தென் கிழக்கிற்கும், தெற்கிற்கும் இடைப்பட்ட பகுதி தென், தென் கிழக்கு (SSE) ஆகும். தெற்கிற்கும், தென் மேற்கிற்கும் இடைப்பட்ட பகுதி தென் தென்மேற்காகும். (SSE) தென் மேற்கிற்கும் மேற்கிற்கும் இடைப்பட்ட பகுதி மேல் தென்மேற்கு (WSW) ஆகும்.

மேற்கிற்கும் வட மேற்கிற்கும் இடையில் மேல் வட மேற்காகவும் (WNW) வட மேற்கிற்கும் வடக்கிற்கும் இடைப்பட்ட பகுதி வட, வட மேற்கு (NNW) திசையாகவும் 16 திசைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவை 'உபதிசைகள்' என்று கூறப்படுகின்றன. இந்த உப திசைகள் Three letter point மூன்று எழுத்து புள்ளியில் நடைபெறும். உபதிசைகளுக்கிடையில் இன்னொரு திசை என்ற அடிப்படையில் எட்டுத்திசைகளுக்கு மேலதிகமாக மேலும் எட்டுத்திசைகள் குறிக்கப்படுகின்றன.



## திசைகாட்டி வகைகள்

திசைகாட்டியூடாக நாம் தேவைப்படும் திசையை அறிந்து கொள்ள முடிகின்றது. ஆனாலும்



மாலுமிகள் பயன்படுத்தும் திசைகாட்டி




பெருவிரலால் இயக்கும் திசைகாட்டி



பண்டைய திசைகாட்டி



விமானத்தில் திசைகாட்டி




பூமத்திய திசைகாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசையறி கருவி

திசை காட்டி பயன்படுத்தப்படுகின்ற துறைகளைப் பொறுத்து அவை வேறுபடுகின்றன. பொறியியல் திசை காட்டி, பொதுவான திசைகாட்டி என்பன உதாரணங்களாகும். வன பரிபாலனத்துறையினர், சாரணர் ஆகியோர் 'சில்வா திசைகாட்டி' என்ற கருவியைப் பயன்படுத்துகின்றனர்.




## திசைகாணும் முறை

திசையறி கருவியை சம தரையில் வைத்து பக்கத்தில் உள்ள உலோகம், காந்தம் ஆகியவற்றை அகற்றுங்கள். அப்போது திசை காட்டும் ஊசி வடக்கு நோக்கி அசைந்து நிற்கும். அதனை (N) காட்டும். அனேகமாக அரைவாசி சிவப்பு நிறத்தாலான ஊசி வடக்கைக் காட்டும். பின்னர் அந்த திசையை உலோகம் அல்லாத ஓர் அடிமட்டம் அல்லது வேறு ஓர் அடையாளத்தைக் கொண்டு அடையாளப்படுத்திக் கொண்டு ஏனைய திசைப்புள்ளிகளைக் கண்டுகொள்ளலாம்.



## வரைபடத்தில் திசையைக் காட்டுதல்

வரைபடங்களில் வடக்கை (N) என்று காட்டுவது குறிக்கப்பட்டுள்ள புள்ளியில் உண்மையான வடக்கை அறிந்து கொள்வதற்காகும். அதன்மூலம் ஏனைய திசைகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

திசைகாட்டியில் ஊசி வடக்கை காட்டும்போது அது காட்டுவது உண்மையான வடதுருவத்தையல்ல. அது காட்டுவது கனடாவின் வடக்கையாகும். இதன்படி மையப்புள்ளிக்கும் வடக்கிற்கும் இடையில் சில பாகைகள் வேறுபாடு இருந்து வருவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனாலும், இந்த வேறுபாடு அவ்வளவாக கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இந்த புள்ளி அளவு வேறுபாடு நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. இலங்கையிலும் மேற்காக 3 பாகையளவு சரிவு இருப்பதாக கணிக்கப்பட்டிருக்கின்றது.

## உண்மையான வடக்கை கண்டறிதல்

அனேகமான வரைபடங்களில் வலது பக்க மேல் முனையில் வடக்கு காட்டப்பட்டிருக்கும். வரைபடத்தில் வடக்கைக் காட்டும். மையப்புள்ளி குறித்துக்காட்டப் பட்டிருக்குமாயின் அப்புள்ளியில் சமதரையில் இருக்குமுகமாக திசையறி கருவியை வைத்து அவதானித்தால் திசையைக் காணலாம். சில வரைபடங்களில் உண்மையான வடக்கு காட்டப்பட்டிருக்கும். அப்போது திசைகாட்டியில் 3 பாகை மற்றும், 183 பாகையில் சுழற்றினால் திசையை சரியாக கணிப்பிடலாம்.

## சில்வாவின் திசைகாட்டியில் திசை கணிப்பிடும் முறை

இந்த திசைகாட்டியின் கீழ் ஒரு பிளாஸ்டிக் தட்டை வடிவ அமைப்பு இருக்கின்றது. அந்தத் தட்டில் திசைக்காட்டிக் கருவியில் உள்ள திசைகாட்டும் ரேகையை சரியாக உரிய பக்கத்திற்கு நகர்த்திக்கொள்ள வேண்டும்.

பின்னர் அதனை அசையாத தட்டையான இடத்தில் வைக்க வேண்டும். அருகில் உள்ள இரும்பு மற்றும் உலோகப் பொருட்களை அகற்றிவிடுங்கள். பின்னர் திசைகாட்டி ஊசி வடக்கு நோக்கி நகர்ந்து அசைவை நிறுத்தும். அப்போது அந்த ஊசி நிற்கும் திசையுடன் அதில் குறிக் கப்பட்டுள்ள பாகை அளவுப் புள்ளியையும் கண்டுகொள்ள லாம். அதில் இருந்து எத்தகைய பாகையில் திசை காட்டப்படுகின்றது என்பதை அறியலாம். (ஆ)



வனபரிபாலன அதிகாரிகளின் திசைகாட்டி

ஹன் அரச வம்ச திசைகாட்டி

சர்க்கஸ் பிரியர்களை கவர்ந்திழுக்கும் அருங்காட்சியகம்தான் 'ரிங்லிங் பிரதர்ஸ் சர்க்கஸ்' அருங்காட்சியகம். இது அமெரிக்காவின் விஸ்கொன்சினில் உள்ள பாராபூ என்னுமிடத்தில் உள்ளது.

உலகப் புகழ்பெற்ற ரிங்லிங் பிரதர்ஸின் தாயகமே பாராபூ. மிகப் பழைமையான சர்க்கஸ் அருங்காட்சியகம் இதுவாகும். இங்கு அதிசயமான சர்க்கஸ் பொருட்கள் உள்ளன. கோடை காலத்தில் இங்கு சர்க்கஸ் காட்சிகளும் இடம்பெறுகின்றன.

ரிங்லிங் பிரதர்ஸ் சர்க்கஸ் பாராபூவில் 1884 ஆம் ஆண்டு ஏழு சகோதரர்களில் ஐந்து பேரால் ஸ்தாபிக்கப்பட்டது. அல்பெர்ட், அகஸ்ட், ஒட்டோ, அல்பிரட், சார்ல்ஸ், ஜோன், ஹென்ரி ஆகியோரே இந்த சகோதரர்கள். ஆரம்பத்தில் சிறிய அளவில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த சர்க்கஸ் பின்னர் மிகப் பெரியதாக பிரபல்யம் அடைந்தது.

இந்த அருங்காட்சியகத்தில், மிக அதிக எண்ணிக்கையில் அழகான சர்க்கஸ் வாகனங்கள், ஆடைகள், புகைப்படங்கள் மற்றும் பொருட்கள் இடம்பெற்றுள்ளன. இதன் ஆய்வு நூலகம் ஒரு தகவல் சுரங்கமாகும். அதில், அமெரிக்க சர்க்கஸ்கள், சர்க்கஸ் கலைஞர்கள் பற்றிய விபரங்களுடன், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அசல் சர்க்கஸ் போஸ்டர்களும் உள்ளன.

இந்த அருங்காட்சியகம் ஒரு தேசிய வரலாற்று அடையாளமாக



# ரிங்லிங் பிரதர்ஸ் சர்க்கஸ் அருங்காட்சியகம்

அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இங்கு வருவோர், குறிப்பாக இளம் வயதினர், சர்க்கஸுக்குப் பின்னே என்ன நடக்கிறது என்று அறிந்துகொள்ளலாம். தாங்களே நேரடியாக சர்க்கஸ் காட்சியிலும் பங்குபெறலாம்.

1985 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை பல்வேறு அமெரிக்க நகரங்களில் நடைபெற்ற 'மாபெரும் சர்க்கஸ் அணிவகுப்பில்' இந்த அருங்காட்சியகம் பங்கேற்றது. முந்தைய ஆண்டுகளில் சர்க்கஸ்களின்போது நடைபெற்ற அணிவகுப்புகளை நினைவுகூரும்விதமாக அந்த அணிவகுப்பு நடைபெற்றது. அதில், மிகவும் பழைமையான, அருமையான, குதிரையால் இழுக்கப்படும் வண்டிகளும், 30 'பேண்ட் குழுக்களும்' இடம்பெற்றன. மக்கள் கண்டுகளிக்கும்படி நிகழ்ச்சிகளை நடத்தியபடியே அவை நகர்ந்து சென்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொமரோஸ்

**அரசு:** ஒரு சட்ட சபைகொண்ட பல கட்சிக் கூட்டுக்குடியரசு.
**சுதந்திரம்:** பிரான்சிடமிருந்து-1975 ஜூலை 6.
**தேசிய பெயர்:** யூனியன் டெஸ் கொமரெஸ் (Union of the Comoros).
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினம், ஜூலை 6.
**அதிபர்** (2006): அகமட் அப்துல்லா செம்பி.

## புவியியல்

கொமரோஸ் (கொமரூஸ்), மேற்கு இந்து சமுத்திரத்தில் மொசாம்பிக்கின் கிழக்கே ஆபிரிக்க கடற்பகுதியில் அமைந்துள்ள நான்கு தீவுகளைக்கொண்ட ஒரு தீவுக்கூட்டமாகும். ஒவ்வொரு தீவும் எரிமலைப் பாறைகளைக் கொண்ட கரடுமுரடான நில அமைப்புடன் கூடியது. 'க்ரேண்ட் கொமோர்' (நிஜாஸிட்ஜா) என்பது இத்தீவுக் கூட்டத்தின் பெரிய தீவாகும். இது ஒழுங்கற்ற மேட்டு நிலத்தையும் இரு எரிமலைகளையும் கொண்டுள்ளது. உயர் மலைச் சிகரமாகிய கர்தலா இத்தீவில்தான் காணப்படுகின்றது.


ஜனாதிபதி

அன்ஜூவான் (நிஸ்வானி) இரண்டாவது பெரிய தீவாகும். இங்கு எரிமலைக் குழம்பாலான உருகிய பாறைகளைக் கொண்ட மேட்டு நிலம் காணப்படுகின்றது. இங்கு மூன்று எரிமலைத் தொடர்கள் காணப்படுகின்றன. மொஹெலித் தீவின் மத்தியில் மலைத்தொடர்கள் காணப்படுகின்றன. இங்கு சில மழைக்காடுகளும் காணப்படுகின்றன. சில சிறிய ஆறுகளும் பாய்கின்றன. மயோட்டி என்பது மற்றொரு தீவாகும்.

**மொத்த நிலப்பரப்பு:** 83.8 ச.மைல் (2170 ச.கி.மீ);
**நிலப்பிரிவுகள்:** 4 தீவுகள்.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** மொரோனி.
**உயர் மலைச்சிகரம்:** கர்தலா மலை (2361 மீ);
**தாழ்மையம்:** இந்து சமுத்திரம்.
**மக்கள் தொகை** (2009): 752,438.
**நாணயம்:** பிரேங்க்.
**மொழிகள்:** அரபு மற்றும் பிரெஞ்ச் (இரண்டும் உத்தியோகபூர்வ மொழிகள்); ஷிகோமோரோ.



**இனக்குழுக்கள்:** அன்ட்டோலேட், கெஃப்ரி, மகோவா, ஒய்மட்சஹா,சகலாவா.
**சமயங்கள்:** சுன்னி முஸ்லிம் 98%, ரோமன் கத்தோலிக்கம் 2%.
**எழுத்தறிவு வீதம்** (2003): 57%.
**இணையத்தளக் குறியீடு:** .km
**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +269
**தேசிய சின்னங்கள்:** மலர், மரம், பறவை, மிருகம், விளையாட்டு என எதுவுமே பிரகடனப் படுத்தப்படவில்லை.
**தேசிய கீதம்:**
I beramu isi pepeza
i nadi ukombozi piya
i daula ivenuha
tasiba bu ya i dini voya trangaya
hunu Komoriya.... என
ஆரம்பமாகின்றது.

## வரலாறு

முற்காலத்தில் ஆபிரிக்கா, மடகஸ்கார், இந்தோனேஷியா மற்றும் அரேபிய பயணிகள் அடிக்கடி சென்று தங்கும் ஒரு தளமாகவே கொமரோஸ் திகழ்ந்தது. பின்னர் அந்நாட்டை ஐரோப்பியர்கள் கைப்பற்றினர். எனினும், இங்கு அரேபியர்களின் ஆதிக்கம் அதிகமாகத் திகழ்கின்றது.

1843 இல் பிரான்ஸ் நாடு கொமரோஸ் நாட்டின் மயோட்டி தீவைக் கைப்பற்றியது. 1904 ஆம் ஆண்டளவில் முழுத் தீவுக் கூட்டமும் அவர்கள் வசமானது. 1974 இல் மக்கள் தீர்ப்பின்படி, 95% ஆனோர் சுதந்திரம் வேண்டுமென வாக்களித்தனர். மயோட்டி தீவில் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். ஏனைய தீவுகளில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இதனால், மயோட்டி தீவு மக்கள் சுதந்திரத்திற்கு எதிராக வாக்களித்தனர். மயோட்டித் தீவு இன்றளவிலும் கடல்கடந்த பிரான்சியப் பிராந்தியமாகத் திகழ்கின்றது.1975 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி கொமரோஸ் சுதந்திரமடைந்தது. அஹமட் அப்துல்லா ஜனாதிபதியானார். சுதந்திரத்திற்குப் பின்னர் நான்கு ராணுவப் புரட்சிகள் இடம்பெற்றன.

## காலநிலை

வருடந்தோறும் நொவெம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாத இறுதிவரை மழைக்காலமாகும். கோடைகாலத்தில் வெப்பநிலை 90 பாகை வரை உயரும். மே முதல் ஒக்டோபர் வரை வெப்பநிலையிலும் ஈரலிப்புத் தன்மையிலும் அதிக மாற்றங்கள் நிகழும். சூறாவளியின் தாக்கங்களும் உண்டு.


தேசிய இலச்சினை



## கலாசாரம்

பரவலாகப் பேசப்படும் மொழியாக கொமோரியன் (Comorian) எனப்படும் ஷிகோமோரோ (Shikomoro) மொழி பேசப்படுகின்றது. 1992 வரை உத்தியோகபூர்வ எழுத்துக்கள் எதுவும் கிடையாது. அரபு, லத்தீன் எழுத்துக்களே பயன்படுத்தப்படுகின்றன.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்:16,900; செல்லிடத் தொலைபேசிகள்: 16,100. **வானொலி நிலையங்கள்** (2001): AM 1, FM 4, SW 1. **இணையத்தள வழங்குனர்கள்** (2005): 5; **இணையத்தளப் பாவனையாளர்கள்** (2005): 20,000.


## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 880 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 673 கி.மீற்றர்; செப்பனிடப்படாதவை : 207 கி.மீற்றர்). **துறையும் துறைமுகங்களும்:** மயோட்டி, மௌட்சமௌரு. **விமான நிலையங்கள்** (2004):4.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் : 36%): கறுவாப்பட்டை, ஏலம்,தேங்காய், வாழைப்பழங்கள். **தொழிலாளர் தொகை** (1996):144,500 (விவசாயம் 80% கைத் தொழிலும் சேவைகளும் 20%). **வேலையற்றோர்:** 20%. **கைத்தொழில்கள்:** உல்லாசப் பயணத்துறை,வாசனைப் பொருட்கள். **ஏற்றுமதிகள்** (2004): வெனிலா மற்றும் சுவையூட்டிகள், கறுவா, கொப்பரா. **இறக்குமதிகள்** (2004): அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள், நுகர்வுப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள், சீமெந்து, போக்குவரத்துச் சாதனங்களும் உதிரிப்பாகங்களும். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், சிங்கப்பூர், துருக்கி, ஜேர்மனி, தென் ஆபிரிக்கா, கென்யா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பாகிஸ்தான், இத்தாலி, மொரீஷியஸ்.




## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ பழைய ஜூம்மா பள்ளிவாசல், மொரோனி கடற்கரை, அரப் க்வாடர் (மொரோனி) ✱ பிம்பினி கடற்கரை, சுல்தான் மாளிகை, Dziancoundre நீர் வீழ்ச்சி (அன்ஜூவான்) ✱ மொஹேலி கடற்பூங்கா, கேவ் ஹோனி (மொஹேலி) ✱ மயோடி குடா, மயோடி கடற்கரை (மயோடி) ✱ கர்தலா மலை ✱ ச்சின்டினி கடற்கரை.


தலைநகரின் சேய்மைத் தோற்றம்


கர்தலா மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலிமை, துணிச்சலின் அடையாளம் கழுகு

**பறக்கும் பறவை இனங்களில் உருவத்தில் மிகப்பெரிதாகக் காணப்படுவது ஈகல் (Eagle) என்றழைக்கப்படும் கழுகாகும். பறவையினங்களில் கம்பீரமும் வலிமையும் மிக்கதாகக் கழுகு இனமே காணப்படுகின்றது. புராதனகாலம் முதல் கழுகுகளின் கம்பீரத்தோற்றமானது மனித இனத்தைக் கவர்ந்து வந்துள்ளது.**

வலிமை, துணிச்சல், சுதந்திரம், சாகாவியல்பு என்பவற்றின் குறியீட்டுச் சின்னமாக இது மதிக்கப்படுகின்றது. ஆதிகால அரசர்கள் பலர் கழுகையே தமது ஆட்சிச் சின்னமாகப் பாவித்து வந்துள்ளனர். இன்றுகூட அமெரிக்கா, எகிப்து, மெக்ஸிகோ போன்ற நாடுகளின் அரச இலச்சினைகளில் கழுகு அடையாளப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். அமெரிக்க அரச இலச்சினைகளில் சிறகு விரித்துக் காணப்படும் கழுகு அம்பொன்றையும் ஒலிவ் கிளையொன்றையும் தாங்கி நிற்பதானது, போரையும் சமாதானத்தையும் குறிப்பதாக அமைந்துள்ளது. கராத்தே, குங்பூ போன்ற தற்காப்புப் பயிற்சிகளின் குறியீடாக கழுகு அமைந்திருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

கழுகுகள் (Eagles), பருந்துகள் (Hawks), ராஜாளிகள், வல்லூறுகள் (Vultures), கடற்கழுகுகள் போன்ற 55 கழுகினங்கள் உலகின் பல பாகங்களிலும் காணப்பட்டாலும் அண்டார்டிக்காக் கண்டத்தில் மட்டும் இவை காணப்படுவதில்லை. கழுகு இனத்தில் மிகச் சிறியவை 42 சென்ரிமீற்றர் நீளம் கொண்ட ஐரெஸ் ஈகல் (Ayres eagle) என்றழைக்கப்படும் கழுகாகும். மிகப் பெரிய இனம் 100 சென்ரிமீற்றர் வரை நீளமானது.

கழுகுகள் கடலோரப் பகுதிகளிலும், மலைச்சரிவான பகுதிகளிலும் மிக உயர்ந்த மரங்களிலும் கூடுகட்டி வாழ்கின்றன. மரக்குச்சிகள், தடிகள், காய்ந்த சருகுகள் கொண்டு கூடுகள் கட்டப்படுகின்றன. உறுதியான மரக்குச்சிகள் கொண்டு கட்டப்படுவதால் இவற்றின் கூடுகள் நீண்டகாலம் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வப்போது புதிய குச்சிகள் சேர்க்கப்படுவதனால், கூடுகளின் பருமன் அதிகரித்துக்கொண்டே செல்லும் தன்மை கொண்டது. அமெரிக்காவில் ஒஹியோ மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கழுகுக்கூடு சுமார் 900 கிலோகிராம் நிறைகொண்டதாகவும் 36 வருடங்கள் பழைமை வாய்ந்ததாகவும் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதிகமான கழுகினங்கள் கபிலம் அல்லது கறுப்பு நிறம் கொண்டதாகவே காணப்படும். சில இனங்களின் வயிற்றுப்புறம் வெள்ளையாகவும் கோடுகள் அல்லது குறியீடுகள் கொண்டதாகவும் காணப்படும். நீண்டதும் பெரியதுமான கீழ்நோக்கி வளைந்த முனை கொண்டதாக கழுகுகளின் சொண்டு காணப்படுவதோடு, நீண்ட கூரான கால்விரல்களையும் கொண்டிருக்கும். எனினும், இனத்துக்கு இனம் இவை வேறுபட்டுமிருக்கும். கழுகு இனங்கள் முன்னோக்கிப் பார்க்கும் கண்களைக் கொண்டதாக இருப்பதோடு, சிறந்த தூரப்பார்வையுடையதாகவும் உள்ளன.

இவை பகலில் இரை தேடித்திரியும் பழக்கம் கொண்டவை. அடர்ந்த காடுகளில் காணப்படும் கழுகு இனம் இலகுவாகப் பறந்து இரைதேடக்கூடிய முறையில், சிறிய சிறகுகளையும் நீண்ட வாலையும் கொண்டிருக்கும். திறந்த வெளிகளில் வாழும் கழுகினம் வானவெளியில் நீண்ட தூரம் சிறகடிக்காமல் வட்டமிட்டவாறே இரைதேட வசதியாக பெரிய இறக்கைகளைக் கொண்டிருக்கும்.

பெரும்பாலான கழுகுகள் வானத்தில் வட்டமிட்ட வண்ணமே இரைகளைக் குறிவைக்கும் தன்மை கொண்டவை. சில கழுகுகள் உயரமான மரங்களில் இருந்துகொண்டே நோட்டம் விட்டு இரையை தேடிப் பிடிக்கும் தன்மை கொண்டன. கழுகுகளின் வலிமை, திடீர் தாக்குதல் காரணமாக இரைகளால் தப்பிச் செல்ல முடிவதில்லை. அனேகமாக, உயிருள்ள இரைகளையே கழுகுகள் பெரிதும் விரும்புகின்றன. அந்த வகையில், எலிகள் முதல், மான், குரங்குகள் வரை கழுகுகளுக்கு இரையாகின்றன. பிணந்தின்னும் கழுகுகளும், பாம்பு விழுங்கும் கழுகு இனங்களும் மீன் தின்னும் கழுகினங்களும் உலகில் காணப்படுகின்றன. இவற்றில் 'சேர்பண்ட் ஈகல்' பாம்பை விழுங்கும் கழுகினமாகும். பிலிப்பைன்ஸில் வாழும் கழுகினம் குரங்குகள், நாய்கள், பன்றிகள் போன்றவற்றை இரையாகக் கொள்வன. இவை ஆசியா,ஆபிரிக்கா, தென் ஐரோப்பா போன்ற நாடுகளில் காணப்படுகின்றன.

பெண் கழுகுகள் பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு முட்டைகளையே இடும். இவற்றின் முட் டைகள் இளங்கபில நிறமாகக் காணப்படும். கரும்புள்ளிகள் அல்லது குறியீடுகள் கூட சில முட்டைகளில் காணப்படும். பெரிய கழுகு இனங்களின் அடை காக்கும் காலம் 49 நாட்கள் வரையாகும். குஞ்சு பொரித்த பின்னர் ஆண் கழுகும் பெண் கழுகும் குஞ்சுகளுக்கு இரையூட்டிப் பாதுகாக்கும். குஞ்சு சுயாதீனமாகக் கூட்டை விட்டுப் பறப்பதற்கு 130 நாட்கள் வ்ரை செல்லலாம். கூட்டை விட்டுக் குஞ்சு பறந்தாலும் கூட்டுக்கு அண்மையிலேயே அவை சில காலம் சுற்றிக் கொண்டிருக்கும்.

**-செம்மைத்துளியான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் I (கடந்த வாரத் தொடர்ச்சி....)

சுட்டெண்: ............................ நேரம்: 45 நிமிடங்கள்

★ *19 ஆம் 20 ஆம் வினாக்களிலுள்ள வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக்கொண்ட கூற்றைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.*

19. மாணவர்களின் **கோரிக்கை** நிறைவேறியதால், அவர்கள் **குதூகலத்தோடு** வகுப்பறைக்குச் சென்றனர்.
    (1) கட்டளை, கோபம் (2) நிபந்தனை, துன்பம் (3) வேண்டுகோள், மகிழ்ச்சி

20. மாணவர்களின் **வருங்காலம்** அவர்களின் **ஆற்றலில்** தங்கியுள்ளது.
    (1) எதிர்காலம், அபிவிருத்தி (2) எதிர்காலம், திறன் (3) நிகழ்காலம், திறன்

21. பொது மக்களை ஏற்றிச் செல்லும் அரச, தனியார் பேரூந்து வண்டிகளில் உள்ள சில ஆசனங்களுக்கு அருகே சில அறிவுறுத்தல்கள் எழுதப்பட்டிருக்கும். பேரூந்து வண்டிகளில் எழுதப்பட்டிருக்காத அறிவுறுத்தல் எதுவெனக் கண்டுபிடித்து, அதன் கீழ்க் கோடிடுக.
    (1) கர்ப்பிணித் தாய்மாருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
    (2) வயோதிபருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
    (3) மதகுருமாருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

★ *கீழே தரப்பட்டுள்ள முதற்கூட்டில் உள்ள இரண்டு எண்களுக்குப் பதிலாக சரியான எண்களைக்கொண்ட கூட்டைத் தெரிவு செய்து, அதன்கீழ்க் கோடிடுக.*

22. [30 X 10] +25 = 325 (1) [150 X 3] (2) [20 X 20] (3) [150 X 2]

23. 12 + [16 + 4] = 32 (1) [13 + 2] (2) [11 + 9] (3) [30 - 2]

24. கால அளவுகளை ஒழுங்குபடுத்தி எழுதினால், வரும் ஒழுங்குமுறைகளைத் தெரிவு செய்து, அதன்கீழ்க் கோடிடுக.
    (1) வாரம், நாள், மணி, செக்கன், நிமிடம் (2) செக்கன், நிமிடம், நாள், வாரம், மணி
    (3) செக்கன், நிமிடம், மணி, நாள், வாரம்

25. பாடசாலையில் கணித செய்கைகளைக் கற்கும் ஒழுங்குமுறையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.
    (1) பெருக்கல், வகுத்தல், கழித்தல், கூட்டல் (2) கூட்டல், கழித்தல், வகுத்தல்,பெருக்கல்
    (3) கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்


26. லவன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின்போது 100m ஓட்ட நிகழ்ச்சியில் நல்ல பயிற்சி பெற்றும் அவனால் அந்த நிகழ்ச்சியில் வெற்றி பெற முடியவில்லை. இதற்கான காரணமாக அமையக்கூடியது;
    (1) விளையாட்டு மைதானம் வேறுபட்டமை.
    (2) லவனைவிட வேகமாக ஓடக்கூடியவர்கள் இருந்தமை.
    (3) உணவு உண்ணாமல் பங்குபற்றியமை.

27. 'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல' என்ற பழமொழிக்குப் பொருத்தமான சந்தர்ப்பம் பின்வருவனவற்றில் எது?
    (1) விளையாட்டில் காயப்பட்ட மாணவனுக்கு ஊசி மருந்து ஏற்றியமை.
    (2) புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவருக்கு பெற்றோர் ஆறுதல் கூறியமை.
    (3) நோய்வாய்ப்பட்ட தந்தையை இழந்த சிறுவன் சுனாமியால் தாயையும் இழந்தமை.

28. பத்திரிகை நிறுவனம் ஒன்றில் நடைபெறும் செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன. அச்செயற்பாடுகள் ஓர் ஒழுங்குமுறையில் தரப்படவில்லை. அவற்றை ஒழுங்கு முறைப்படுத்தினால் வரும் சரியான விடையைத் தெரிவு செய்க.
    A - அச்சிடுதல் B - ஒழுங்கமைத்தல் C - செய்திகளைச் சேகரித்தல்
    D -விநியோகித்தல் E - சரிபார்த்தல்
    (1) C, B, E, A, D (2) B, A, D, E, C (3) C, A, B, D, E

★ *பின்வரும் கோட்டுப்படத்தின் உதவியுடன் 29 ஆம், 30 ஆம் வினாக்களுக்கு விடை தருக.*

***சீதாவின் தாய் திலகா, தந்தை ரமேஷ், சீதாவின் சகோதரன் குமார், சீதாவின் மகள் நிருஷிதா, குமாருக்கு இரு பிள்ளைகள்; துவாரகி, துவாரகன் ஆவார்கள்.***




29. இங்கு A, C ஆகிய கூடுகளுக்குப் பொருத்தமான பெயர்கள் முறையே;
    (1) சீதா, நிருஷிதா (2) குமார், துவாரகன் (3) சீதா, துவாரகி

30. துவாரகனுக்கு சீதா என்ன முறையிலான உறவு என்பதைக் காட்டுக.
    (1) அக்கா (2) மச்சாள் (3) மாமி

★ *பின்வரும் கோவையைப் பார்க்க.*

**20 ✡ 3 = 100 △ 40**

இங்கு = குறியீடானது சமனைக் கருதுகின்றது. நியம கணிதச் செய்கைகளுக்காக ✡, △ என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப




31. ✡ என்னும் குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
    (1) கூட்டல் (2) பெருக்கல் (3) வகுத்தல்

32. △ என்னும் குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?
    (1) வகுத்தல் (2) பெருக்கல் (3) கழித்தல்

★ *33 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.*

33. எழுதும்போது எழுதுகோலை மிகச் சரியாகப் பிடித்து எழுதும் முறையைக் காட்டும் உரு எது?
    (1)  (2)  (3)  (....................)

34. மாணவர் வகுப்பறையில் கதிரை ஒன்றில் சரியாக அமர்ந்திருக்கும் உரு எது?
    (1)  (2)  (3)  (....................)

***பின்வரும் உருக்களைப் பயன்படுத்தி விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***

**□ + △ = 800g , △ - □ = 200g**

35. △ + □ + □ என்பதன் பெறுமானம் யாது?
    (1) 1300g (2) 1100g (3) 1000g (....................)

36. வீதியொன்றில் இரு கம்பங்களுக்கு இடையில் 3 கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அவ்வீதியில் 12 கம்பங்கள் இருப்பின், எத்தனை கொடிகள் பறக்க விடப்பட்டிருக்கும்?
    (1) 36 (2) 33 (3) 15 (....................)

***பின்வரும் தகவல்களைக்கொண்டு 37 ஆம், 38 ஆம் வினாக்களுக்குரிய விடையின் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.***

| | |
|---|---|
| கொப்பி - 3<br>புத்தகம் - 2 | கொப்பி - 2<br>புத்தகம் - 2 |
| விலை ரூபா 120.00 | விலை ரூபா 100.00 |

37. ஒரு புத்தகத்தின் விலை என்ன?
    (1) ரூபா 30.00 (2) ரூபா 20.00 (3) ரூபா 25.00 (....................)

38. இரண்டு கொப்பிகளை வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?
    (1) ரூபா 60.00 (2) ரூபா 40.00 (3) ரூபா 50.00 (....................)

39. 20 □ 4 □ 3 = 48 எனின், பெட்டிகளினுள் பொருத்தமான கணித செய்கைக் குறியீட்டை எழுதுக.

40. சொற்கள் பிரித்தெழுதப்படாத வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவ்வாக்கியங்களிலுள்ள சொற்களை உரிய முறையில் பிரித்து, கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

    நூறுரூ பாய்தாள் காசின்பின்பு றத்தில் பெண் கள்தேயிலைக் கொழுந் தினைப்பறிக் கின்றா ர்கள்

    ..................................................................................

    ..................................................................................

## வினாத்தாள் I இன் விடைகள்

***(ஜூன் 09, 16 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)***

| | | | | |
|---|---|---|---|---|
| 01. (ii) | 02. (iii) | 03. (ii) | 04. (i) | 05. (iii) |
| 06. (ii) | 07. (ii) | 08. (iii) | 09. (ii) | 10. (iii) |
| 11. (iii) | 12. (ii) | 13. (ii) | 14. (ii) | 15. (ii) |
| 16. (iii) | 17. (ii) | 18. (ii) | 19. (iii) | 20. (ii) |
| 21. (ii) | 22. (iii) | 23. (ii) | 24. (iii) | 25. (iii) |
| 26. (ii) | 27. (iii) | 28. (i) | 29. (iii) | 30. (iii) |
| 31. (ii) | 32. (iii) | 33. (i) | 34. (ii) | 35. (ii) |
| 36. (ii) | 37. (i) | 38. (ii) | 39. 20-4×3=48 | |

40. நூறு ரூபாய் தாள்காசின் பின்புறத்தில் பெண்கள் தேயிலைக் கொழுந்தினைப் பறிக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளாம்பழத்தின் மகிமை





கடினமான ஓட்டினால் மூடப்பட்ட விளாம்பழம், 'Rutaceae' என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது. எலுமிச்சம்பழம், வில்வம் பழம், பம்ப்ளிமாஸ் போன்ற பழ வகைகளும் இந்த பழக் குடும்பத்தைச் சேர்ந்தவையே. *Limonia acidissiama* எனும் தாவரவியல் பெயரால் அழைக்கப்படுகின்ற விளாம் பழமானது அதிக மருத்துவக் குணம்கொண்டது. அத்துடன், குறைந்த விலையில் நிறைந்த பயன்களைக்கொண்டதாகவும் இப்பழம் திகழ்கின்றது.

## இரு வகைகள்

விளாமரங்களை இருவகையாகப் பிரிக்கலாம். அதில் ஒன்று, பெரிய பழங்களை விளைவிக்கும் மரங்கள். மற்றையது, சிறிய பழங்களை விளைவிக்கும் மரங்கள். பெரிய பழங்கள் இனிப்புச் சுவை அதிகம்கொண்டவை. சிறிய வகைப் பழங்களோ புளிப்புச்சுவை அதிகம் கொண்டவை. எனினும், இரண்டும் ஒரே அளவான மருத்துவக் குணங்களையே கொண்டிருக்கும். நன்கு பழுத்த விளாம்பழம்தான் உண்பதற்கு ஏற்றதோடு, மருத்துவப் பயன்பாடுகளும் அதிகம் கொண்டதாகவும் இருக்கும்.

## சிறந்ததை தெரிவுசெய்தல்

விளாம்பழத்தில் உண்பதற்கேற்ற பழத்தை தெரிவு செய்வது சற்றுக் கடினமான காரியம்தான். காரணம், அது கடினமான ஓட்டினால் மூடப்பட்டிருப்பதே ஆகும். ஆக, விளாம்பழத்தை குலுக்கிப்பார்ப்பதனூடாகவே அது பழமா? இல்லையா? என்பதை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். ஏனெனில், நன்கு பழுத்த பழத்தின் சதைப்பகுதி உட்புற ஓட்டோடு ஒட்டாமல் இருக்கும். எனவே, குலுக்கிப் பார்க்கும்போது உள்ளிருக்கும் சதைப்பகுதி வேறாக ஆடுவதை உணரக்கூடியதாக இருக்கும்.

## சத்துக்களும் நன்மைகளும்

சுண்ணச்சத்து, புரதச்சத்து, மாப்பொருள் என்பன நிறைந்து காணப்படுகின்றன. விற்றமின் $B_2$ ஓரளவு உண்டு. விளாம்பழத்தை பார்த்த மாத்திரத்தில் இது உடற்சூட்டை அதிகரிக்கும் ஒரு பழமோ என எண்ணத் தோன்றும். ஆனால், அது தவறு. மாறாக, இது உடலுக்கு நல்ல குளிர்ச்சியைத் தரும் ஒரு பழமாகும். விளாம்பழத்தை தினமும் உண்டு வந்தால் பெரும்பாலான நோய்கள் ஏற்படாமல் இருக்க வழியமைக்கும். அத்துடன், இது ஆயுளை அதிகரிக்கும் தன்மையும்கொண்டது.

## நெஞ்சு வலிக்கு சிறந்த நிவாரணி

சிலருக்கு அடிக்கடி நெஞ்சு வலி ஏற்படும். வேறு சிலருக்கு நெஞ்சு பலவீனமாக இருக்கும். இத்தகையவர்கள் நாள்தோறும் காலை, மாலை என இருவேளைகளிலும் இப்பழத்தை தொடர்ந்து பத்து நாட்களுக்கு உண்டுவந்தால் நெஞ்சு வலி நீங்கிவிடும்.

## பித்த நோய்களுக்கு அருமருந்து

சிலருக்கு அதிகாலை எழும்போதே தலைச்சுற்று ஏற்படும். அத்துடன், கண்பார்வை மங்குவது போன்றிருக்கும். லேசாக மஞ்சள் நிறத்தில் வாந்தி வரும். தலைவலி ஏற்படும். இந்த அறிகுறிகள் பெரும்பாலும் பித்த நோய்களுக்கானதாகவே இருக்கும். இத்தகைய நோய்களினால் அல்லல் படுபவர்கள் தினமும் காலையுணவு உட்கொண்டவுடன் நன்கு பழுத்த விளாம்பழத்துடன் சர்க்கரை சேர்த்து 21 நாட்கள் உண்டு வந்தால், பித்தம் சம்பந்தமான நோய்கள் முற்றாக குணமடையும். உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

பெரியவர்கள் சிலருக்கு பித்த வெடிப்பு ஏற்படுவதுண்டு. சிலருக்கு இப்பித்த வெடிப்பு எரிவை அல்லது வேதனையை ஏற்படுத்தும். இதனைக் குணப்படுத்த விளாமர இலைகளை அரைத்து தினமும் இரவில் பித்த வெடிப்புள்ள இடத்தில் தடவி வந்தால் விரைவில் குணம் தெரியும்.

## சீதபேதியைக் குணப்படுத்தும்

சீதபேதியால் அவதிப்படுபவருக்கு பழுக்காத விளாங்காய் சிறந்தது. நன்கு பழுக்காத விளாங்காயை கொதிநீரில் அவித்து, உள்ளிருக்கும் சதையை உண்ண வேண்டும். அதன்பின், ஒரு வாரத்துக்கு தினமும் காலையில் காய்ச்சிய பசும்பாலைக் குடித்து வந்தால் சீதபேதி குணமாகி, சிறந்த பலன் கிடைக்கும்.

## நரம்புத்தளர்ச்சி நீங்க....

விளாம் பிசினை பசும்பாலில் அரை மணிநேரம் ஊற வைத்து, சர்க்கரை கலந்து உண்டுவர நரம்புத் தளர்ச்சி நீங்கும். அத்துடன், நரம்புத் தளர்ச்சியினால் ஏற்படும் பல்வேறு பலவீனங்களும் குணமாகும். உடலில் புதியதோர் உற்சாகம் பிறக்கும்.

## கல்வி கற்போருக்கு மிகச் சிறந்தது

சில பிள்ளைகள் சரியாக கல்வி கற்பதில்லை அல்லது கற்கும் விடயங்களை நினைவில் வைத்துக்கொள்ள முடிவதில்லை. இதனால், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன், சில பிள்ளைகளிடம் கிரகிக்கும் ஆற்றலும் குறைவாக காணப்படுகின்றது. இத்தகையோர் கல்வியில் பின்தங்கி விடுகின்றனர். இத்தகைய பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பவர்கள் தினமும் ஒரு விளாம்பழத்தை உட்கொண்டு வருவது சிறந்த பலனைப் பெற்றுத்தரும். இவ்வாறு ஓரிரு மாதங்கள் தொடர்ச்சியாக உட்கொண்டு வந்தால், அறிவு வளர்ச்சி மேம்படுவதை உணரலாம். அத்துடன், உடலும் ஆரோக்கியமாகக் காணப்படும். நோய்கள் அணுகும் வாய்ப்பும் குறைந்துவிடும். அத்தோடு, எந்நேரமும் களைப்பின்றி சுறுசுறுப்புடன் செயற்படக்கூடியதாகவும் இருக்கும்.

-(அ)



## விளாம்பழத்தின் மேலும் சில பயன்கள்

* சமிபாட்டை சீராக்கும்.
* சொறி, சிரங்குகளைப் போக்கும்.
* குருதியை சுத்திகரிக்கும்.
* உடல் நன்கு வளர்ச்சி அடையும்.
* தோல் சுருக்கத்தை நீக்கும்.
* உடலை இளமை குன்றாமல் வைத்திருக்கும்.
* மூளைக்குப் பலத்தைக் கொடுக்கும்.
* வளரும் குழந்தைகளின் எலும்பிற்கு உறுதியைக் கொடுக்கும்.
* இருதயத்தை பலப்படுத்தும்.
* இருதயத் துடிப்பை சீராக வைத்திருக்கும்.
* மனக் குழப்பங்களைப் போக்கும்.
* அஜீரணக் கோளாறுகளைச் சீராக்கும்.
* அதிக உமிழ்நீர் சுரப்பதைக் கட்டுப்படுத்தும்.
* பற்களை உறுதியாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைனோசர்கள்

**பலகோடி வருடங்களுக்கு முன்னர் உலகில் வாழ்ந்ததாகக் கருதப்படும் பிரமாண்ட உயிரினமான டைனோசர்கள் எவ்வாறு அழிந்தன? என்ற கேள்விக்கு இன்றுவரை உறுதியான காரணத்தை விஞ்ஞானிகளால் கண்டறிய முடியவில்லை. அவை பட்டினியால் இறந்தனவா?, காலநிலை மாற்றத்தால் இறந்தனவா?, நோய்கள் தாக்கி அழிவுக்குள்ளானதா? அல்லது வறட்சி காரணமாக அழிவினை எதிர்கொண்டதா? என்பதை அறிய பல்வேறு ஆராய்ச்சிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். எனினும், போதிய ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.**

ஆனால், அண்மையில் கிடைத்த சில தகவல்கள் டைனோசர்கள் பூமியிலிருந்து எவ்வாறு அழிவடைந்தன என்பதற்கு ஓரளவு விடை தருவதாக அமைந்துள்ளன. டைனோசர்கள் பூமியிலிருந்து அழிவடைந்து சுமார் 15 மில்லியன் வருடங்களாகின்றன. அப்போது பூமியுடன் பாரிய விண்கல்லொன்று மோதியதால் பூமியில் பாரிய அழிவு ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்தே டைனோசர்கள் பூமியில் இருந்து முற்றாக அழிந்துள்ளன என ஆய்வுகளில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கடந்த 20 வருடங்களாக திரட்டப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலேயே அவர்கள் இதனை உறுதி செய்துள்ளனர்.

## முன்னாள் அரசன்

பல கோடி வருடங்களுக்கு முன்னர் இப்புவியில் வாழ்ந்த டைனோசர்களை 'கொடிய ஊர்வன' என்று அர்த்தப்படும் வகையில் 'டைனோசர்' என்று பெயரிட்டவர் ரிசட் ஒவன் என்பவராவார்.

1842 ஆம் ஆண்டில் டைனோசர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்களால் டைனோசர்களின் எச்சங்களைக் கண்டெடுக்க முடிந்தபோதும், அவற்றின் அழிவுக்கான உறுதியான காரணங்களைக் கண்டறிய முடியாமல் போனது. அத்துடன், 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இந்த உயிரினம் பூமியில் வாழ்ந்த உயிரினங்களின் அரசனாகவே வாழ்ந்துள்ளது.

ஆகவே, அத்தகைய பலம் வாய்ந்த உயிரினம் முற்றாக அழிவதற்கு ஏதுவான காரணம் என்ன? என்பது ஆராய்ச்சியாளர்களை நீண்டகாலமாக சிந்திக்க வைத்தது. அக்காலத்தில் பூமியில் நிகழ்ந்த பாரிய எரிமலை வெடிப்புக் காரணமாகவும் இத்தகைய உயிரினங்கள் அழிந்திருக்கலாம் என்றும் சிலர் கருதினர்.

## விண்வெளி மூலகம்

'இரிடியம்' என்பது சிறு கிரகங்கள், விண்கற்கள் என்பனவற்றில் உள்ள ஒருவகை மூலகமாகும். முற்காலத்தில் பூமியின் 'துன்குஸ்கா' என்ற பகுதியில் விழுந்த 100 அடி பரப்பளவைக் கொண்ட பாரிய விண்கல்லின் சிதைவுகளில் இருந்து இந்த மூலகம் கண்டறியப்பட்டது. அந்த விண்கல் பூமிக்கு மேலாக 5 மைல் தொலைவில் தீப்பற்றி எரிந்து வெடித்துச் சிதறியதால், பூமியிலும் அதன் துகள்கள் விழுந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

### பூமியில் மோதிய விண்கற்களே இருந்துள்ளன எ

**டைனோசர்கள் அழிவடைந்தமைக்கான விஞ்ஞானிகள் வெளிப்படுத்தினர்.**

- 15 கி.மீ விட்டமுடைய விண்கல் ஒன்று 65 மி வருடங்களுக்கு முன்னர் பூமியில் மோதியது.
- அது பாரிய வெடிச்சத்தத்துடன் அணுகுண்டெ நிலும் 20 மடங்கு சேதத்தை பூமியில் ஏற்படு
- அந்த மோதலானது உலக யுத்த காலத்தில் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டிலும் பில்லியன் மடங்கு சக்தியை வெளியிட்டுள்ள




## லுவீ அல்வாரேயும் வொல்டரும் கூறியவை

பௌதீக விஞ்ஞானியான லுவீ அல்வாரே என்பவரும் அவரது புதல்வரான வொல்டர் என்பவரும் 1980 ஆம் ஆண்டு அபூர்வமான விடயம் ஒன்றைக் கூறினார்கள். அதாவது, திடீர் என வெடித்துச் சிதறிய விண்கற்களின் பாகங்கள் துன்குஸ்கா பகுதியில் வீழ்ந்ததால் ஏற்பட்ட தாக்கம் காரணமாகவே டைனோசர்கள் இறந்ததாக அவர்கள் கூறினர். அதனை நிரூபிக்கும் ஆதாரங்களாக பூமியின் பல பாகங்களில் இருந்து






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறு அழிந்தன?

**ளே டைனோசர்களின் அழிவுக்கு காரணமாக ன என்பது உறுதியாகியுள்ளது**




பெற்றுக்கொண்ட மண் மாதிரிகளையும் தடயங்களையும் முன்வைத்தனர். இவற்றைப் பரீட்சித்தபோது, அந்த மாதிரிகள் டைனோசர்கள் வாழ்ந்ததாக கருதப்படும் காலத்திற்குரியவை என்பது உறுதியாகியது. இந்த மண் மாதிரிகளைப் பரீட்சித்தபோது அதில் 'இரிடியம்' மூலகம் கலந்திருப்பது கண்டறியப்பட்டது.

## துன்குஸ்கா வெடிப்பு

1908 ஆம் ஆண்டு ஜூன் 03 ஆம் திகதி சோவியத் ரஷ்யாவின் சைபீரியா பிராந்தியத்தில் துன்குஸ்கா பகுதியில் வெடிப்புச் சத்தமொன்று கேட்டதாக அப்பிராந்தியவாசிகள் தெரிவித்தனர். அப்போது இந்த வெடிப்பு நிகழ்ந்ததாகக் கூறப்பட்ட இடத்தில் இருந்து சுற்றிவர 9 கி.மீ தூரத்திற்குள் இருந்த மரங்கள், செடி-கொடிகள், புல் பூண்டுகள் அனைத்தும் நெருப்பில் கருகிச் சாம்பல் ஆகியிருந்தன. 25 கி.மீ தூரத்துக்குட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அனைவரும் இறந்தனர்.

இந்த வெடிப்பு ரஷ்யாவின் பெருமளவு மனித சஞ்சாரம் இல்லாத பகுதியில் நிகழ்ந்ததால், வெடிப்பின் மர்மத்தைத் துலக்க விஞ்ஞானிகளுக்கு 21 வருடங்கள் ஆகின. அந்த வெடிப்பு நிகழ்ந்த பிரதேசத்தில் உள்ள மண் மாதிரிகளை ஆராய்ச்சி செய்த விஞ்ஞானிகள், அதில் 'இரிடியம்' பெருமளவில் கலந்திருப்பதைக் கண்டறிந்தனர். இந்த மூலகம் விண்கல்லில் அல்லது விண்வெளியில் சுற்றிவரும் சிறுகோள்களிலேயே இருக்கின்றது என்பதால், விண்கல் ஒன்று வெடிப்புக்குள்ளாகியுள்ளது என்றும் அந்த வெடிப்பினால் ஏற்பட்ட தாக்கத்தினாலேயே சேதங்கள் ஏற்பட்டதாகவும் விஞ்ஞானிகள் உறுதி செய்தனர்.

## மெக்ஸிகோ கிடங்கு

வட மெக்ஸிகோவின் யுகாடான் குடாநாட்டின் (ச்)சிசூலுப் நகரில் 15 கி.மீ விட்டமுடைய விண்கல் கிடங்கொன்றை 1978 ஆம் ஆண்டில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். டைனோசர்களின் அழிவுக்குக் காரணமான விண்கல் இதுவாகத்தான் இருக்கும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இந்த விண்கல் கிடங்கை ஆராய்ந்தபோது, அது 65 மில்லியன் வருடங்கள் பழைமை வாய்ந்தது என்பது புலனாகியது. எனவே, இத்தகைய விண்கற்கள் பூமியில் வீழ்ந்ததாலேயே டைனோசர்கள் அழிவை எதிர்நோக்கியதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## விண்கற்களால் உயிரிழந்த டைனோசர்கள்

லுவீ மற்றும் வொல்டர் ஆகியோரின் கூற்றுக்களின்படி; விண்கற்களாலும் அதில் இருந்து வெளியேறிய நச்சுத்தன்மை கொண்ட மூலகங்களாலும் டைனோசர்கள் இறந்ததாக ஊர்ஜிதமாகியுள்ளது. இந்த விண்பொருள் பூமியில் மோதி வெடித்துச் சிதறியதால், பாரிய தூசுப்படலம் மேல் எழுந்து வளிமண்டலத்தில் கலந்துள்ளது. இதனால், பல்லாண்டுகளாக சூரிய ஒளி பூமியில் படவில்லை. அதனால், இப்புவி குளிர்ச்சியடைந்திருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த விண்கல் வெடிப்புக் காரணமாக பூமியின் குறிப்பிட்ட பகுதியில் உயிரினங்கள், தாவரங்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளன.


இந்த தூசுப்படலம் படிப்படியாக விலகி, பின்னர் தட்டுத் தட்டாகப் பூமியில் படிந்துள்ளது என்பது மேற்படி விஞ்ஞானிகளின் கருத்தாகும். ஆனால், அண்மைக்காலம் வரையில் இக்கருத்தை எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, நிராகரிக்க முடியாத கருத்தாக மட்டுமே அது கருதப்பட்டு வந்தது.

## புத்திஜீவிகளின் குழு தெரிவிக்கும் செய்தி

15 கி.மீ விட்டமுடைய விண்கல்லொன்று பூமியில் மோதியதாகவும், உலக மகாயுத்த காலப்பகுதியில் ஜப்பானின் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டைவிட 100 கோடிக்கும் அதிகமான அணுகுண்டுகளின் சக்தி, குறித்த விண்கல் மோதலின்போது பூமியில் ஏற்பட்டதாகவும் இந்த புத்திஜீவிகள் குழு தெரிவிக்கின்றது. யுகாடான் குடாநாட்டில் விழுந்ததும் அத்தகையதொரு விண்கல்தான் என அக்குழுவினர் தெரிவிக்கின்றனர். அதன்படி, லுவீயும் அவரது புதல்வரும் பல வருடங்களுக்கு முன்னர் கூறிய கூற்றை இப்போது விஞ்ஞானிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.


அத்துடன், அத்தகையதொரு விண்கல் மோதலால்தான் டைனோசர்கள் அழிந்துவிட்டதாகவும் அதன் பின்னர்தான் உலகில் பாலூட்டிகளும் ஏனைய உயிரினங்களும் பரவலடைந்ததாகவும் அதில் பிரதானமானதொரு இனமாக மனித இனம் திகழ்வதாகவும் இந்த சர்வதேச புத்திஜீவிகள் குழு மேலும் தெரிவித்துள்ளது.

-அமீர் ஹுசைன்









விண்கல்லொன்று பூமியில் மோதுவதை சித்தரிக்கும் படம்



சைபீரியாவில் உள்ள துன்குஸ்கா கிடங்கு



பூமியை நோக்கி வரும் விண்கல்லொன்று

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# வெள்ளிக்கிண்ணம் புகட்டிய பாடம்

ஓர் ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவருக்கு நீண்ட நாளாக ஓர் ஆசை. அதாவது, துறவி ஒருவருக்கு வயிறார உணவு கொடுத்து அவரை மகிழ்விப்பதுடன், அவரின் ஆசியையும் பெற வேண்டும் என்பதுதான்.

ஒருநாள் அந்த தனவந்தர் உண்மையான இறை பக்திகொண்ட துறவி ஒருவரைத் தேடி பல இடங்களுக்கும் சென்றார். இறுதியாக ஊரின் எல்லையில் உள்ள ஒரு சத்திரத்தில் ஒரு துறவி இருப்பதாக கேள்விப்பட்டு அங்கு சென்றார். சிறிது நேரம் மறைந்து அந்தத் துறவியின் செயற்பாடுகளை அவதானித்த தனவந்தருக்கு அந்த துறவியின் மீது பக்தியும் மரியாதையும் ஏற்பட்டது.

தனவந்தர் துறவியை அணுகி அவரை வணங்கித் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். பிறர் மனதை என்றும் வருத்தாத அத்துறவி, தனவந்தரின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

குறிப்பிட்ட நாளில் துறவியும் தனவந்தரின் வீட்டை அடைந்தார். பக்தியுடனும் மரியாதையுடனும் துறவிக்கு உணவு பரிமாறப்பட்டது. விலை உயர்ந்த வெள்ளிக்கிண்ணம், வெள்ளித்தட்டுகளில் பல்சுவை உணவுகள் வைக்கப்பட்டிருந்தன. தனவந்தரின் அன்புத்தொல்லை காரணமாக துறவி உணவுகளை சுவைத்து உண்டார். பின்னர் தனவந்தரின் குடும்பத்தினருக்காக பிரார்த்தனை செய்துவிட்டு, விடை பெற்றுச் சென்றார்.

அன்றிரவு துறவி உறங்குவதற்காக ஆயத்தமானபோது தனது துணிப்பையில் ஏதோ ஒரு பொருள் இருப்பதை அறிந்து துலாவிப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! தனவந்தரின் வீட்டில் இருந்த விலை உயர்ந்த வெள்ளிக் கிண்ணம் ஒன்று அதற்குள் இருந்தது.

துறவி உடனடியாக அதனை எடுத்துக் கொண்டு தனவந்தரின் வீட்டிற்குச் சென்றார். நடந்தவற்றைக் கூறி வெள்ளிக் கிண்ணத்தைக் கொடுத்தார். தனவந்தரும் துறவிக்கு நன்றி கூறினார். துறவி தனவந்தரை மெதுவாகத் தன்பக்கம் அழைத்து, ''உங்களுக்கு இந்த சொத்துக்கள், பணம் எல்லாம் எப்படிக் கிடைத்தன? எனக் கேட்டார். தனவந்தரும் துறவியிடம் உண்மையைக் கூறத் தயங்கவில்லை. ''சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு நான் மிக வறுமையில் வாழ்ந்தேன்-கஷ்டப்பட்டேன். அப்போது ஒருவரின் பணத்தைத் திருட வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தப் பணத்தில்தான் பல வியாபாரங்களைச் செய்து இந்த சொத்துக்களை சேர்த்தேன்'' என்றார்.

அதனைக் கேட்ட துறவி மௌனமாக அவ்விடத்தை விட்டு அகன்றார். ''ஒரு திருடனின் வீட்டில் உணவு உண்டதால் எனக்கும் அதன் பிரதிபலிப்பைக் காட்டி விட்டதே'' என மனம் நொந்தார்.

திருடுவது ஒரு பாவச் செயல். அதனால், சிறு வயதாக இருக்கும்போதே திருட்டுச் செயலுக்கு பழக்கப்படாது. நம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

என்.மொஹமட் லாபீர்,
பதுளை.

# நெற்றியடி!



ஒருமுறை அரசர் அக்பர் நாட்டை விட்டு வெளியேறச் சொன்னதற்குக் கீழ்ப்படிந்து நாட்டை விட்டு வெளியேறினார் பீர்பால். பல மைல்கள் நடந்து சென்ற களைப்பில் ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். பசி வயிற்றைக் கிள்ளியது. கையில் பணம் இல்லை. இதனால், சோர்வுற்ற பீர்பால் அந்த வீட்டுத் திண்ணையில் அப்படியே சாய்ந்தார். வீட்டு சொந்தக்காரர் பீர்பாலை அடையாளம் கண்டுகொண்டு அவரை எழுப்பி, உண்ண உணவுகொடுத்து அந்த ஊர் ஜமீன்தாரிடம் கொண்டு போய் சேர்த்தார். அந்த ஊர் ஜமீன்தார் மகா கஞ்சன்.

''என்னிடம் அதிகமான வேலைக்காரர்கள் இருக்கின்றனர். நீர் என் மகனுக்கு கல்வி கற்றுக்கொடும். தகுந்த சன்மானம் கொடுக்கிறேன்'' என்றார் ஜமீன்தார்.

''எவ்வளவு ஊதியம் தருவீர்கள்?'' என்று கேட்டார் பீர்பால்.

''நீர் மிகப்பெரிய கல்விமான் என்பது எனக்குத் தெரியும்.ஆனாலும், என்னால் அதிகளவு பணம் தரமுடியாது. உமக்கு மூன்று வேளை சாப்பாடு போட்டு மாதம் பத்து ரூபா பணம் தருகிறேன்'' என்றார் ஜமீன்தார்.

பீர்பாலின் நிலைமையை உணர்ந்து குறைந்த செலவில் மகனுக்கு பாடம் கற்றுக்கொடுக்க வைத்துவிடலாம் என்பது ஜமீன்தாரின் எண்ணம்.

பீர்பாலுக்கு வந்த கோபத்துக்கு அளவே இல்லை. சுற்று முற்றும் பார்த்தார். அங்கே ஒருவன் நின்று கொண்டிருந்தான். ''அவன் யார்?'' என்று ஜமீன்தாரிடம் கேட்டார் பீர்பால்.

''என்னுடைய குதிரை வண்டி ஓட்டுபவன்'' என்றார் ஜமீன்தார்.

''அவனுக்கு என்ன சம்பளம் கொடுக்கிறீர்கள்?'' என்றார் பீர்பால்.

''மூன்று வேளை சாப்பாடு போட்டு மாதம் பதினைந்து ரூபா கொடுக்கிறேன்'' என்றார் ஜமீன்தார்.

அதைக்கேட்டதும் மேலும் கோபம் அதிகமாகிவிட்டது பீர்பாலுக்கு. ''உங்கள் மகன் பத்து ஆண்டுகள் படித்தபின் என்ன செய்யப்போகிறான். என்னைப்போல பத்து ரூபாதானே அவனால் சம்பளம் வாங்க முடியும். அதைவிட குதிரை வண்டி ஓட்டக் கற்றுக்கொடுத்தால் மாதம் பதினைந்து ரூபா பணம் சம்பாதிப்பானே'' என்றார் பீர்பால்.

நெற்றியடி அடித்தது போல உணர்ந்த ஜமீன்தார் அவமானத்தால் தலை குனிந்தார்.

தொகுப்பு:
மர்ஸியா நாபிர், பேருவளை.



## தூக்கம் பலவிதம்

* வாத்துக்கள் நீரில் வட்டமடித்துக்கொண்டே தூங்கும்.
* ரொபின் இனப்பறவைகள் பாடிக்கொண்டே தூங்கும்.
* பாம்புகள் கண்களைத் திறந்துகொண்டே தூங்கும்.
* வரிக்குதிரைகள் நின்றுகொண்டே தூங்கும்.
* கோழிகள் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே தூங்கும்.
* குரங்குகள் மரத்தில் தொங்கியபடியே தூங்கும்.
* மாடுகள், ஒட்டகங்கள் அசை போட்டுக்கொண்டே தூங்கும்.
* மனிதனால் மட்டுமே முதுகைப் பூமியில் படும்படி படுத்துத் தூங்கமுடியும்.

தொகுப்பு: எஃப்.சியானா,
தரம் - 8, குளியாப்பிடிய மு.வித்.,
குளியாப்பிடிய.

# போதைப் பொருள் பாவனை



மயிலூர் ஓர் அழகான ஊர். அந்த ஊரின் நற்பெயரைக் கெடுப்பதற்கு அங்கு ஒருவன் இருந்தான். அவன் தான் ரவி. அவன் ஒரு குடிகாரன். அத்துடன், போதைப்பொருள் பாவிப்பவனும்கூட. அவனுக்கு ஒரு மகனும் இருக்கின்றான். அவனது மகனோ தந்தைக்கு நேர்மாறானவனாக காணப்பட்டான். ரவி தனது மகனுக்கும் போதைப் பொருள் பழக்கத்தை ஏற்படுத்த முனைவான். ஆனால், மகனோ அதிலிருந்து எப்படியாவது தப்பித்துக் கொள்வான்.

ஒருநாள் மதுபோதையில் ரவி பாதையில் சென்றுகொண்டிருக்கையில் ஒரு சிறுவன் அவனின் எதிரில் அகப்பட்டான். ரவி அவன் மயிரைப் பிடித்திழுத்து, தன் வாயிலிருந்த சிகரட்டை எடுத்து அந்த சிறுவனின் வாயில் வைத்து புகைக்கச் சொன்னான். இதனால், பீதியடைந்த அச்சிறுவன் அவன் பிடியிலிருந்து தப்பிச்சென்று ஊர் பெரியவர்களிடம் இதுபற்றி முறையிட்டான். இவ்வாறு அவன் ஊரிலுள்ள பல சிறு பிள்ளைகளுக்கும் புகைத்தலைப் பழக்க முனைந்தான்.

இதனை அறிந்த அவனது மகன் அவனுக்கு எதிராக செயற்பட்டான். போதைப்பொருளின் கெடுதி பற்றி எழுதி அனைத்துவீட்டு வாசல்களிலும் போட்டான்.

அதுமட்டுமன்றி, போதைப் பொருளின் தீமை பற்றி அனைவருக்கும் போதனை செய்யலானான். அவனது அறிவுரையைக் கேட்டு படிப்படியாக போதைப்பொருள் பாவிப்பவர்கள் திருந்தலாயினர். மகனின் போதனையால் காலப்போக்கில் தந்தை ரவியும் திருந்தினார். நாமும் முயன்றால் முடியாதது எதுவும் இல்லை. முயற்சி செய்யுங்கள். போதைப் பொருள் பாவனையாளர்களைத் திருத்திவிடலாம்.

எம்.நஸ்ஹான், தரம் - 7B,
ப/அல்-முர்ஷித் ம.வித்.,
சில்மியாபுர.

# ஷேக்ஸ்பியரின் பொன்மொழிகள்

* பிறப்பால் சிறப்புப் பெறுவதைவிட வாழ்ந்து காட்டிச் சிறப்புப் பெறுபவர்களே வரலாறாகிறார்கள்.
* நல்லது என்றோ, கெட்டது என்றோ எதுவும் கிடையாது. தமது எண்ணமே அதை அவ்வாறு தோற்றமளிக்கச் செய்கிறது.
* ஒருவனுடைய வாய்ப் பேச்சைக் காட்டிலும் அவனது மௌனம் அதிகமான எண்ணங்களைப் பிரதிபலிக்கும்.
* வறுமையே ஆயினும் மனதில் போதுமென்ற திருப்தி உண்டாகுமானால், அதுவே உயரிய செல்வமாகும்.
* மூடன் தன்னை அறிவாளி என்று நினைத்துக் கொள்கிறான். ஆனால், அறிவாளியோ தன்னை முட்டாள் என்று அறிவான்.
* காலத்தில் தாமதம் வேண்டாம். தாமதங்களால் அபாயகரமான முடிவும் ஏற்படும்.
* மது உனது மூளையைச் செயல் இழக்கச் செய்து, உன்னையும் முட்டாளாக்கி விடுகிறது.
* உன்னை நம்பியவனுக்கு ஊழியம் செய். நேர்மையானவனை நேசி. குறைவாகப் பேசி-நிறைவாக செவிப் புலன்களுக்கு வேலை கொடு. நியாயத் தீர்ப்பை எதிர்கொள்.
* கற்பனை மொத்தத்தில் பிழைப்பைக் கொடுக்கும் சுகமான கனவு.
* பிடிவாதக்காரர்களுக்கு அவர்கள் அடையும் இன்னல்களே பாடங்களாகும்.

வி.கமலநயணன், தரம் - 7A, சரஸ்வதி ம.கல்., பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3613

ஆர்.அஜந்தன்,
தரம் - 1[J],
நோர்வூட் த.ம.வித்.,
நோர்வூட்.


அங்.இல: 3614

சாலிம் அஹமட்,
தரம் - 7[D],
ஸாஹிரா தே.பாட.,
கம்பளை.


அங்.இல: 3615

எம்.லுக்மான்,
தரம் - 6[C],
அல்-பஹ்ரியா ம.கல்.,
பாணந்துறை.


அங்.இல: 3616

த.குணாஜினி,
தரம் - 12,
யா/வரணி ம.வித்.,
வரணி.


அங்.இல: 3617

டி.முஷ்தாக்,
தரம் - 11,
ஷரபிய்யா அ.க.,
மதவாக்குளம்.


அங்.இல: 3618

ம.தினுசன்,
தரம் - 7,
யாழ்ப்பாணக் கல்.,
வட்டுக்கோட்டை.


அங்.இல: 3619

ஹிம்ஸா பத்ருதீன்,
தரம் - 7,
மின்ஹாத் தே.பாட.,
திக்குவல்லை.


அங்.இல: 3620

க.காமிளா,
உயர் தரம்,
புனித மரியாள் ம.ம.வித்.,
கொழும்பு.


அங்.இல: 3621

தினேஷ் குமார்,
தரம் - 8,
விவேகானந்தா வித்.,
கடுகஸ்தொட்ட.


அங்.இல: 3622

எம்.ஆஸிம்,
தரம் - 2[A],
அந்-நூர் தே.பாட.,
வாழைச்சேனை.


அங்.இல: 3623

எம்.விவேத், தரம் - 11,
தொண்டைமனாறு
வீ.ம.வித்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3624

சாள்ஸ் லியோ,
உயர் தரம்,
உயிலங்குளம் வித்.,
மன்னார்.

# கிரேக்கப் பேரழகி அட்லாண்டா



கிரேக்க நாட்டுப் பெண்களிலேயே பேரழகியாகப் போற்றப்படுபவள் இளவரசி அட்லாண்டா. இவளது தந்தை எதிர்பார்த்ததற்கு மாறாக ஏமாற்றத்தைத் தந்து பெண்ணாகப் பிறந்த அட்லாண்டா, பிறந்ததும் மலை ஒன்றில் கொண்டுபோய் விடப்பட்டாள். அங்கே அவள் பெண் கரடி ஒன்றால் வளர்க்கப் பெற்றாள். காட்டிற்கு வேட்டையாட வந்த சிலர் இக்குழந்தையைக் கண்டு, தங்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்றனர்.

அட்லாண்டா பெரியவளாக வளர்ந்ததும் அரசன் மீண்டும் அவளை ஏற்றுக்கொண்டதுடன், திருமணத்திற்கும் ஏற்பாடு செய்தான்.

அழகில் சிறந்த விளங்கிய அட்லாண்டாவை மணக்க இளைஞர்கள் பலர் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தனர். ஆனால், அட்லாண்டா தன்னை ஓட்டப்பந்தயத்தில் வெல்பவனையே திருமணம் செய்து கொள்வதாக அறிவித்ததுடன், அந்தப் போட்டியில் கலந்துகொண்டு தோல்வியடைவோர் தங்கள் உயிரை இழக்க வேண்டுமெனவும் நிபந்தனை விதித்தாள். இளைஞர்கள் பலர் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொள்ள முன்வந்து தோல்வி கண்டு உயிரையும் இழந்தனர்.

இறுதியாக வீனஸ் என்ற பெண் தெய்வத்தின் அருள் பெற்ற இளைஞன் போட்டிக்கு வந்தான். வழக்கம் போலவே அட்லாண்டா முன்னே ஓடிக்கொண்டிருந்தாள். அந்தவேளையில், அவளுக்கு முன் ஒரு பொன்னாலான ஆப்பிள் பழம் ஒன்று உருண்டு செல்வதைக் கண்ட அட்லாண்டாவுக்கு அதன்மீது ஆசை உண்டாயிற்று. அக்கனியைக் குனிந்தெடுத்தாள். அட்லாண்டா கனியை எடுக்கக் குனிந்தபோது இளைஞன் முந்திச் சென்றானாயினும் மறுபடியும் அவளே முந்தி ஓடினாள். இன்னொரு பொற்கனி உருண்டது. அதையும் அவள் எடுத்தாள். பந்தயம் முடியும் நிலையில் மீண்டுமொரு கனி. ஆனால், மூன்றாவது கனியை எடுக்க அவள் முனைந்தவேளையில், பந்தயம் இறுதிக்கட்டத்தில் இருந்தது.

அப்போது இளைஞன் முந்தி ஓடிப் பந்தயத்தில் வெற்றி கொண்டான். இந்த மூன்று பொற்கனிகளையும் உருட்டி விட்டவன் அந்த இளைஞனே. அவை வீனஸ் பெண் தெய்வத்தால் அவனுக்கு அளிக்கப்பட்டவை. ஓட்டப்பந்தயத்தில் தன்னை வெற்றி கண்ட இளைஞனை அட்லாண்டா தனது அறிவிப்பின்படி திருமணம் செய்துகொண்டாள்.

# துஷாரா கலைவட்டம் - 2010

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

* அளவு - அங்குலம் 14×18 அளவு
* வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
* தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
* ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
* பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

* முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
* பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
* பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| *முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர்* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை)* | *கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர்* | *தெரிவிற்கு ஒருவர் வீதமாக* | *கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர்* | *பிரிவுக்கு ஒருவர் வீதமாக* | *கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள்* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம்* | *கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron விசேட வெற்றியாளர்கள் 150* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்* |
| *Acron சான்றிதழ் பெறுவோர் 400* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *விருது, சான்றிதழ்* |
| *திறமைச்சான்றிதழ் 2000* | *ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக* | *விருது, சான்றிதழ்* |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.
(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)
சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704.

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAY A

அகில இலங்கை சித்திரப்போட்டி-2010

Acron® All Island Art Competition

விண்ணப்பப்படிவம் Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/
பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex : ஆண் Female ☐ பெண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

| ............................ | ............................ | ............................ |
|---|---|---|
| போட்டியாளரின் கையொப்பம் Applicant's Signature | திகதி Date | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் Parents/ Guardians Signature |

பிரதான அனுசரணை: Acron COLSTAR
ஊடக அனுசரணை:

[illegible] பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



சி.சிவராகவன், தரம் - 11,
கந்தரோடை த.கந்தையா வித்.,
யாழ்ப்பாணம்.



ஏ.சஹுஹாசினி, தரம் - 2,
மில்லகந்த த.ம.வித்.,
ஹொரனை.



கி.வினோத், தரம் - 4$^{B}$,
முருங்கன் ம.வித்., மன்னார்.




என்.ரகுவரன், தரம் - 7$^{A}$,
பின்னவலை த.ம.வித்.,
பலாங்கொடை.




ரிஹாமா ஹுஸைன்,
தரம் - 10$^{T}$, முஸ்லிம் ம.கல்.,
காலி.



எல்.யோஜினி, தரம் - 6$^{A}$,
புனித மரியாள் த.ம.வித்.,
எட்டியாந்தோட்டை.



எம்.நிபாத், தரம் - 6,
கொட்டம்பபிடிய மு.ம.கல்.,
ஹெட்டிபொள.



எம்.உஸ்மான், தரம் - 7$^{B}$,
அல்-மனார் மத்.கல்.,
மருதமுனை-02.



ஐ.றியாஸ், தரம் - 3,
மதீனா வித்., வவுனியா.



ஏ.டிலானி, தரம் - 5,
கலைமகள் த.ம.வித்., கண்டி.



எஃப்.இன்ஷிரா,
தரம் - 8B$^{T}$, ஸாஹிரா கல்.,.
கம்பளை.



எம்.ரிப்கான்,
தரம் - 8$^{A}$,
சாஹிரா தே.பாட.,
புத்தளம்.



பாணந்துறை, எலுவிலையைச் சேர்ந்த லாபிர்-ரொசானா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.சப்தர், 11.06.2010 அன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல் : சுமையா யெசீர்)*



கலகெதர மடிகே, வேத்தாவ வீதியைச் சேர்ந்த ஷுக்ரி-பாத்திமா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஒமர் ஷுக்ரி, தனது நான்காவது பிறந்ததினத்தை 17.06.2010 அன்று தனது இல்லத்தில் கொண்டாடவுள்ளார். இவரை வாப்பா (லண்டன்), உம்மா, உறவினர்கள் மற்றும் கலகெதர மடிகே கோல்டன்றூட் பாலர் பாடசாலை நண்பர்கள் அனைவரும் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல் : எச்.ஏ.ஷகூர்)*



அக்கரைப்பற்று, பனங்காட்டைச் சேர்ந்த நந்தகோபன்-மோட்சவதி தம்பதியரின் செல்வப் புதல்வி ஜயபிரதா, 21.06.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் பாசுபதேசுவரர் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல் : கே.கே.லோகநாதன்)*

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



சம்மாந்துறை அல்-முனீர் வித்தியாலயத்தின் இப்னு ஸீனா பாலர் பாடசாலைக் கட்டடத் திறப்புவிழாவும் கைவினைக் கண்காட்சியும் அண்மையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை அதிபர் எம்.ஐ.முகம்மட் தம்பி, ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களையும் படத்தில் காணலாம்.

*(தகவல் : நிப்றாஸ் ம்ன்சூர்-கல்முனை)*




**நாம் கடந்த வாரம் வரையப் பழகிய ரேகைகள் பல்வேறு அமைப்புகளில் இருந்ததை அவதானித்திருப்பீர்கள். இவ்விதழில் அவற்றை வகைப்படுத்தி நோக்குவோம்.**

கோடுகள் அல்லது ரேகைகள் அவற்றின் அமைப்பைப் பொறுத்து பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.


01. நேர்கோடு
02. வளைகோடு
03. அலை வடிவங்கள்
04. சுருள் வடிவான ரேகைகள்
05. பல்லுப் பல்லான ரேகைகள்
06. செங்குத்தான ரேகைகள்
07. கோண ரேகைகள்
08. தடிப்பான ரேகை
09. மெல்லிய ரேகை
10. வட்ட ரேகை
11. கோள ரேகை

**இதற்கமைய, இந்த இலகுவான பயிற்சியை செய்வோம்.**

## திராட்சைக் குலை

1. சிறிய வட்டமொன்றை வரையுங்கள்.
2. சிறிய வட்டங்கள் பலவற்றை படத்தில் உள்ளவாறு இணைத்து வரையுங்கள்.
3. திராட்சைக் குலைக்கு ஏற்ற வட்டங்களை உங்களுக்குத் தேவையானவாறு சேர்த்து இணையுங்கள்.
4. பின்னர் குறித்த திராட்சைக் குலைக்குத் தேவையான இலை, காம்பு போன்றவற்றை வரைந்து படத்தைப் பூரணப்படுத்துங்கள்.
5. தேவையற்ற கோடுகள், புள்ளிகள் இருந்தால் அவற்றை அழித்துவிட்டுப் படத்தை பூரணப்படுத்துங்கள்.
6. உரிய நிறத்தைத் தீட்டுங்கள்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான எண்ணம்

ஒரு செல்வந்தர் வீட்டில் அஞ்சலை என்ற பெண் வேலை செய்து வந்தாள். தினமும் அவள் காலையில் வந்து வீட்டு வேலைகளைச் செய்து முடித்துவிட்டு மாலையில் தன் வீட்டுக்கு சென்றுவிடுவாள். அந்த செல்வந்தர் வீட்டில் அதிகமான கோழிகளை வளர்த்து வந்தனர்.

ஒருநாள் எஜமானி பார்வதி குளிக்கப் போவதற்குமுன் எப்போதும்போல் தன் விரலில் இருந்த வைர மோதிரத்தைக் கழற்றி மேசை மீது வைத்துவிட்டுப் போனாள். எப்போதும் அங்கே வைப்பது தான் அவளது வழக்கம். அப்படி அவள் அன்று மோதிரத்தை வைத்த போது வேலைக்காரி அஞ்சலை அங்கே வேலை செய்துகொண் டிருந்தாள்.

பார்வதி குளித்துவிட்டு வந்தபின்னர் மோதிரத்தை மறந்தே போனாள். சிற்றுண்டி சாப்பிடும்போதுதான் அவளுக்கு தனது மோதிரம் பற்றிய நினைவு வந்தது. ஆனால், மேசை மீது வைத்த மோதிரத்தைக் காணவில்லை. எங்கு தேடியும் அது கிடைக்கவில்லை. தான் மோதிரத்தை வைக்கும்போது, அஞ்சலை அங்கு வேலை செய்து கொண்டிருந்தது பார்வதிக்கு ஞாபகம் வந்தது.

அஞ்சலையிடம் விசாரித்தபோது, அவள் தான் மோதிரத்தைப் பார்க்கவில்லை, அதை எடுக்கவும் இல்லை என்று தீர்க்கமாகக் கூறி விட்டாள். அதுமட்டு மல்லல; இரண்டாண்டு களாக உண்மையாக வேலை செய்யும் தனது நேர்மையைச் சந்தேகப்பட்டு விட்ட தால் வேலையை விட்டு நின்று விடுவதாகக் கூறி நின்று விட்டாள்.



வேலைக்காரி மீது சந்தேகம் நீடித்தது. ஒருநாள் பலமாக மழை பெய்ய வீட்டு வாசலில் சற்று மேடான இடத்திலிருந்த மண்ணை மழைநீர் அடித்துச்செல்ல, பள்ளமான அந்தப் பகுதியில் ஏதோ மின்னியது. அதைக் கண்ட பார்வதி, அருகில் சென்று ஒரு சிறுகுச்சியால் கிளறி என்னவென்று பார்த்தாள். என்ன ஆச்சரியம்! திருட்டுப் போனதாக நினைத்த அவளது மோதிரம்!

மேசை மீது வைத்த மோதிரம் எப்படி வாசற்படி மண்தரைக்கு வந்தது என்று பார்வதி யோசித்தாள். அப்போது, ஜன்னல் வழியே குதித்து உள்ளே சென்ற கோழி, மேசை மீதிருந்த அரிசியைக் கொத்தித் தின்றது. சட்டென்று பார்வதிக்கு உறைத்தது. அவள் வளர்க்கும் கோழிகள் வீட்டு வளவுக்குள் மேய்ந்து காய்கறி குப்பைகளைக் கொத்திக் கிளறித் தின்னும். மேசை, கட்டில் என்று பறந்துபோய் அவ்வப்போது உட்காருவதுண்டு. அதேபோல மேசை மீதிருந்த மோதிரத்தையும் கோழி கொத்திச் சென்று, பின்னர் வாசலில் போட்டிருக்கலாம். நடக்கும் காலடித் தடத்தினால் அழுத்தப்பட்டு மோதிரம் மண்ணில் புதைந்திருக்கக்கூடும். தற்போது மழை நீரால் மண் அரிக்கப்பட்டதால் அந்த மோதிரம் கிடைத்திருக்கிறது.

அநியாயமாக வேலைக்காரி அஞ்சலையைச் சந்தேகப்பட்டு விட்டோமே என்று உள்ளுக்குள் வருந்தினாள். எஜமானி பார்வதி வேலைக்காரியை அழைத்து, மோதிரம் கிடைத்த செய்தியைச் சொல்லிவிட்டு, மறுநாளில் இருந்து வேலைக்கு வருமாறு கூறினாள். ஆனால், அஞ்சலை விரக்தியோடு பேசினாள்,

"இரண்டு வருசமா உங்க வீட்டில் வேலை செய்யறேன். மோதிரத் தைக் காணோம்னதும் உடனே என்னைச் சந்தேகப்பட்டுக் கேட்டுட் டீங்க. இப்ப மோதிரம் கிடைச்சிருக்கிறதால மறுபடி வேலைக்கு வரச் சொல்றீங்க. நாளைக்கே கம்மலோ, சங்கிலியோ, பணமோ காண லைன் னா எம்மேல சந்தேகப்படுவீங்க. ஏன்னா நாங்க ஏழைங்க. ஒண்ணு தெரிஞ்சுக்கங்கம்மா. நாங்க ஏழையாயிருந்தாலும் நேர்மையா உழைச்சு வாழ்றவங்க! வயிறு காய்ஞ்சாலும் அடுத்தவங்க பொருளுக்கு ஆசைப்படமாட்டோம். இனிமேலும் இங்கே நான் வேலை செய்ய விரும்பல. நான் வர்றேம்மா" என்றபடி விடுவிடுவென்று வெளியேறினாள். பார்வதியின் உள்ளம் குற்ற உணர்வால் கனத்தது.

# அரசருக்கு பேரழகியின் நிபந்தனை



"அந்நியனே, நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? உனது சொந்த நாடு எது? உனது உறவினர் யார்? உனது பெயர்தான் என்ன?" என்று தொடராகக் கேள்விகளைக் கேட்டாள் இளவரசி அல்யோனா.

"எனது பெயர் இவான். வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் என்றும் அழைப்பார்கள். நான் ஒரு நாட்டிலிருந்து வருகிறேன். என் பெற்றோர்கள் குடியான வர்கள்"

"அவ்வாறானால், வயதில் இளைய, அறிவில் மூத்த இவானே, நீயாக விரும்பி என்னைத் தூக்கிச் செல்கிறாயா? அல்லது யாருடை யதும் கட்டளைக்கமைய இதனைச் செய்கிறாயா?"

எமது நாட்டு "அரசர்தான் உன்னைத் தூக்கி வருமாறு உத்தரவிட்டார்" என்றான்.

இது கேட்ட பேரழகி அல்யோனா தனது கைகளை முறுக்கிக்கொண்டு கத்தினாள்; "ஒருபோதும் அந்தக் கிழட்டு முட்டாளை மணம் செய்து கொள்ளமாட்டேன். மூன்று ஆண்டுகளாக எனது அரசுக்கு எதிராகப் போர் தொடுத்தும் ஏராள மான வீரர்களை இழந்தும் என்னை அடைய முடிய வில்லை. இப்போதும் அந்த மன்னரால் என்னை அடையமுடியாது"




இந்த வார்த்தைகள் வயதில் இளைய, அறிவில் மூத்த இவானுக்கு மகிழ்ச்சியைத் தந்தன. ஆனால், அவன் எதுவும் கூறாது தனக்குள் சிந்தித்தான்; "இவளைப் போல எனக்கு ஒரு மனைவி இருந்தால்!"

விரைவிலேயே இவானுடைய சொந்த நாடு கண்ணில் பட்டது. தனது மாளிகையில் அவர்களுக் காக அந்தக் கிழட்டு அரசர் காத்துக் கொண்டிருந்தார். தனது தங்கப் பிடரி மயிர் கொண்ட பெண் குதிரையை அங்கு தரையிறக்கிய இவான் குதிரையை அரண்மனை முற்றத்தில் ஓட்டிச்சென்றான். அரசர் படிகளில் துரிதமாக இறங்கி, சேணத்தினின்றும் பேரழகி இளவரசி அல்யோனா வைத் தூக்கிக் கீழிறக்கி அவளது வெண்ணிறக் கைகளைப் பற்றினார்.

"மூன்றாண்டுகளாக எனது தூதுவர்களை அனுப்பவும் நானே வரவும் செய்தேன். அப்போது நீ மறுத்து விட்டாய். ஆனால், இந்த முறை நீ என்னை மணந்துதான் ஆகவேண் டும்" என்று தொடங்கினார்.

பேரழகி இளவரசி அல்யோனா வெறுமையாக முறுவலித்து விட்டு கூறினாள்; "அரசரே, மணவிழா பற்றிப் பேசுவதற்கு முன்னர் பயணக் களைப்பை நீக்கிக்கொள்ள நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும்"

இதனால், அரசர் சுறுசுறுப் படைந்து, சத்தம் போட்டு அரண் மனைத் தாதிகளையும் வேலைக் காரிகளையும் பணிப்பெண்களை யும் அழைத்தார். "எனது அன்பு விருந்தாளி பேரழகி இளவரசி அல்யோனாவுக்குத் தனியறை தயாரா?"

"அது எப்போதோ தயார், அரசரே"

"நல்லது. இவள் உங்களது அரசியாகப் போகிறாள். ஆகவே, அவளது ஒவ்வொரு உத்தரவு களுக்கும் கீழ்ப்படிந்து நடவுங்கள்"

தாதிகள், வேலைக்காரிகள், பணிப்பெண்கள் பேரழகி இளவரசி அல்யோனாவை அவளது அறைக்கு அழைத்துச் சென்றனர். வயதில் இளைய, அறிவில் மூத்த இவானிடம் அரசர் கூறினார்; "அற்புதம் இவான்! எனக்காக இந்தப் பணியைச் செய்தமைக்கு உன்னைப் பிரதம அமைச்சராக நியமிக்கிறேன். மூன்று நகரங்களையும் அதைச் சுற்றிலும் இருக்கும் நிலங்களையும் உனக்குப் பரிசாக அளிக்கிறேன்"

இரண்டு நாட்கள் கழிந்தன. கிழட்டு அரசர் பொறுமை இழந்தார். மணம் புரிய ஏங்கினார். பேரழகி இளவரசி அல்யோனாவிடம் கேட்டார்; "என்றைக்கு எமது மணநாளை வைத்துக்கொள்வது?"

பேரழகி இளவரசி அல்யோனா பதிலளித்தாள்; "எனது திருமண மோதிரமோ, 'கோச்' வண்டியோ இல்லாமல் எப்படி என்னால் மணம் புரியமுடியும்?"

"ஓ, அதுவென்ன பெரிய விஷயமா? எனது நாட்டில் போதுமான 'கோச்' வண்டி களும் மோதிரங்களும் உள்ளன. உன் விருப்பம் போல அவற்றைத் தேர்ந் தெடுத்துக்கொள்ள முடியும். ஆனால், அவற்றில் எதுவும் உனக்குப் பிடிக்கவில்லை என்றால், கடலுக்கு அப்பால் உள்ள நாடுகளுக்கு தூதுவர் களை அனுப்பி விருப்பமான தைக் கொண்டு வரலாம்"

"வேண்டாம். அரசரே, எனது சொந்தக் 'கோச்' வண்டியைத் தவிர வேறு எதிலும் நான் திருமண மண்டபத்திற்கு செல்லமாட்டேன். எனது சொந்த மோதிரமன்றி வேறு எந்த மோதிரத்தையும் நான் அணிவிக்கமாட்டேன்"

"உனது திருமண மோதிரமும் கோச் வண்டியும் எங்கே இருக்கின்றன?"

"எனது மோதிரம் எனது பெட்டியிலும் எனது பெட்டி எனது கோச் வண்டியிலும் கோச் வண்டி புயான் தீவுக்கு அருகே உள்ள பெருங்கடலின் ஆழத்திலும் உள்ளன. அவற்றை நீங்கள் பெறாதவரை மணவிழாவைப் பற்றிப் பேசாதிருப்பது நல்லது" என்றாள் இளவரசி பேரழகி அல்யோனா. (தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாம் கமலுக்கும் அனிலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**කමල්:** **නංගි, අයියා ඉන්නවාද?**
நங்கி, அய்யா இன்னவாத?
கமல்: தங்கச்சி, அண்ணா இருக்கின்றாரா?

**නංගි:** **ඔව් අයියේ, ඔයා එනකම් බලාගෙන හිටියා. මම කතා කරන්නම්.**
ஒவ் அய்யே, ஒயா எனகம் பளாகென ஹிடியா. மம கதா கரன்னம்.
தங்கை: ஆம் அண்ணா, நீங்கள் வரும்வரை பார்த்துக்கொண்டு இருந்தார். நான் கூப்பிடுகிறேன்.

**අයියේ, මෙන්න කමල් අයියා ඇවිත්.**
அய்யே, மென்ன கமல் அய்யா எவித்.
அண்ணா, இதோ கமல் அண்ணா வந்திருக்கிறார்.

**අනිල්:** **ආ... කමල් ආවාද? ඉන්න මම එන්නම්.**
ஆ.... கமல் ஆவாத? இன்ன மம என்னம்.
அனில்: ஆ..... கமல் வந்திருக்கிறாரா? இதோ நான் வருகிறேன்.

**නංගි:** **කමල් අයියා වාඩිවෙන්න.**
கமல் அய்யா வாடிவென்ன.
தங்கை: கமல் அண்ணா உட்காருங்கள்.

**අනිල්:** **ආ... කමල්, මම හිතුවා හවස එයි කියලා.**
ஆ.... கமல், மம ஹிதுவா ஹவஸ எய் கியலா.
அனில்: ஆ... கமல், நான் பின்னேரம் வருவீர்கள் என்று நினைத்தேன்.

**කමල්:** **වැඩ ඉවරවුණේ දැන් අනිල්.**
வெட இவறவுனே தென் அனில்.
கமல்: இப்போதுதான் வேலை முடிந்தது அனில்.

**අනිල්:** **කීයට විතරද යන්නේ?**
கீயட விதரத யன்னே?
அனில்: எத்தனை மணி அளவில் போகிறீர்கள்?

**කමල්:** **උදේ හයට විතර අනිල්.**
உதே ஹயட விதர அனில்.
கமல்: காலை ஆறு மணியளவில் அனில்.

**අනිල්:** **මම හෙට උදේ ඒ වෙලාවට එන්නම්.**
மம ஹெட உதே ஏ வெலாவட என்னம்.
அனில்: நான் நாளை காலை அந்த நேரத்திற்கு வருகின்றேன்.



**කමල්:** **හොඳයි අනිල්. එහෙනම් මම ගිහින් එන්නම්. නංගි මම ගිහින් එන්නම්.**
ஹொந்தய் அனில். எஹெனம் மம கிஹின் என்னம்.
நங்கி மம கிஹின் என்னம்.
கமல்: நல்லது அனில். அப்போ நான் போய்வருகிறேன்.
நான் போய்வருகிறேன் தங்கச்சி.

**නංගි:** **හොඳයි අයියේ. ඔයාට දෙවි පිහිටයි.**
ஹொந்தய் அய்யே. ஒயாட தெவி பிஹிடய்.
தங்கச்சி: நல்லது அண்ணா. உங்களுக்கு கடவுள் துணை.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* தங்கச்சி, அண்ணா இருக்கின்றாரா?
**නංගි, අයියා ඉන්නවාද?**

i. இதோ கமல் அண்ணா வந்திருக்கிறார்.
..............................................

ii. பின்நேரம் வருவீர்கள் என்று நினைத்தேன்.
..............................................

iii. எத்தனை மணி அளவில் போகிறீர்கள்?
..............................................






**'going to'** (வினைச்சொல்) சகிதம் மூல வினைச்சொல் (Stem Verb) கையாளப்பட்டு உருவாக்கப்படுகின்ற எதிர்கால வாக்கியங்களின் (Future Tense) 'உடன்பாடு நிலை' (Affirmative) மற்றும் வினா நிலை (Interrogative) வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) He is going to start. (Affirmative)
அவன் ஆரம்பிக்கப் போகின்றான். (உடன்பாடு)

(ஆ) Is he going to start? (Interrogative)
அவன் ஆரம்பிக்கப் போகின்றானா? (வினா)

(அ) He is going to start that work tomorrow.
அவன் அந்த வேலையை நாளை ஆரம்பிக்கப் போகின்றான்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஆ) Is he going to start that work tomorrow?
அவன் அந்த வேலையை நாளை ஆரம்பிக்கப் போகின்றானா?
(வினா வாக்கியம் - Interrogative)

---

(இ) She is going to tell. (Affirmative)
அவள் கூறப் போகின்றாள். (உடன்பாடு)

(ஈ) Is she going to tell? (Interrogative)
அவள் கூறப் போகின்றாளா? (வினா)

(இ) She is going to tell the truth.
அவள் உண்மையைக் கூறப் போகின்றாள்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஈ) Is she going to tell the truth?
அவள் உண்மையைக் கூறப் போகின்றாளா?
(வினா வாக்கியம் - Interrogative)

---

(உ) It is going to jump. (Affirmative)
அது பாயப் போகின்றது. (உடன்பாடு)

(ஊ) Is it going to jump? (Interrogative)
அது பாயப் போகின்றதா? (வினா)

(உ) It is going to jump over the wall.
அது சுவரின் மேலாகப் பாயப் போகின்றது.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஊ) Is it going to jump over the wall?
அது சுவரின் மேலாகப் பாயப் போகின்றதா?
(வினா வாக்கியம் - (Interrogative)

---

(எ) This dog is going to jump. (Affirmative)
இந்த நாய் பாயப் போகின்றது. (உடன்பாடு)

(ஏ) Is this dog going to jump? (Interrogative)
இந்த நாய் பாயப் போகின்றதா? (வினா)

(எ) This dog is going to jump over the wall.
இந்த நாய் சுவரின் மேலாகப் பாயப் போகின்றது.
(உடன்பாடு வாக்கியம் - (Affirmative))

(ஏ) Is this dog going to jump over the wall?
இந்த நாய் சுவரின் மேலாகப் பாயப் போகின்றதா?
(வினா வாக்கியம் - Interrogative)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பங்களாதேஷில் 'ஃபேஸ் புக்' மீது விதிக்கப்பட்டிருந்த தடையை அந்நாட்டு அரசாங்கம் நீக்கியுள்ளது. முகம்மது நபி அவர்களை அவமதிக்கும் விதமான 'கார்ட்டூன்'களை

# பங்களாதேஷில் ஃபேஸ்புக் தடை நீக்கம்

வெளியிட்டமைக்காகவே பங்களாதேஷில் ஃபேஸ்புக் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது.

பங்களாதேஷைப் போன்றே பாகிஸ்தானிலும் இதே காரணத்திற்காக ஃபேஸ்புக் மீது தடை விதிக்கப்பட்டிருந்தபோதிலும் குறித்த படங்கள் நீக்கப்பட்டதையடுத்து பாகிஸ்தானிலும் இத்தடை நீக்கப்பட்டது.

# எண்ணெய் கசிவைத் தடுப்பதற்கு 'டைட்டானிக்' இயக்குனர் ஆலோசனை



அமெரிக்காவின் மெக்ஸிக்கோ கடற்பரப்பில் அண்மையில் எண்ணெய் பரண் வெடித்ததில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு இன்னமும் தடுத்து நிறுத்தப்படாததால் அதனைத் தடுப்பதற்கான யோசனைகளை பிரபல ஹொலிவூட் திரைப்பட இயக்குனரான ஜேம்ஸ் கெமரன் முன்வைத்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திரைப்பட இயக்குனர் மட்டுமன்றி, இவர் ஒரு சிறந்த சுழியோடி என்பதும் குறிப்பிடத்தக்கது. 'டைட்டானிக்' திரைப்படத்தை இயக்கிய இவர் ரொபோக்களைக் கொண்டு கடலுக்கடியில் நிஜமான 'டைட்டானிக்'கை கண்டுபிடித்து ஆய்வுகளை மேற்கொண்ட பின்னரே இவர் டைட்டானிக் படத்தைத் தயாரித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த கடல்பகுதியில் எண்ணெய் அகழ்வை மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ் எண்ணெய் நிறுவனத்தின் அதிகாரிகள் கெமரனின் ஆலோசனைகளைப் பெறுவதில் மிகுந்த ஆர்வத்தைக் கொண்டிருந்தனர்.

இந்த எண்ணெய் கசிவை பார்வையிடுவதற்காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா குறித்த கடல் பகுதிக்கு நேரில் விஜயம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## அற்லஸ் கேள்வி - 260

**கேள்வி:** அவுஸ்திரேலிய ஆளுங்கட்சியின் பெயர் என்ன?

சரியான விடை.........................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 260, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 258 இன் சரியான விடை: 1999**

**பரிசு பெறுவோர்**

கோ.கண்ணன்,
கணபதிப்புலம், கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

டி.நிவேதினி,
மெல்வின் 'B', இறக்குவானை.

என்.பஸ்மினா பேகம்,
210, கல்கடுவ, வெலம்பொடை.

# சங்கிலிப்பாலம் அறுந்து சிறுவர்கள் மரணம்

இந்தோனேஷியாவில் ஆற்றின் மேல் உள்ள சங்கிலிப் பாலமொன்று அறுந்து வீழ்ந்ததில் 12 சிறுபிள்ளைகள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

பின்தங்கிய கிராமப் பகுதியொன்றிலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. சம்பவத்தின் போது 37 பேர் குறித்த சங்கிலிப் பாலத்தில் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

குறித்த ஆற்றில் விழுந்த சிறுவர்களில் 25 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதுடன், காயப்பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

# அவுஸ்திரேலிய தேர்தலில் தோல்வி முகத்துடன் ஆளும் கட்சி



அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் தொழிற்கட்சி தோல்வி அடைவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக சமீபத்திய கணக்கெடுப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.




மேற்படி, கணக்கெடுப்பின்படி ஆளும் தொழிற்கட்சியானது எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சியைவிட ஆறு வீதம் பின்னடைவில் இருப்பதாக கூறப்படுகின்றது.

பிரதமர் கெவின் ருட் தலைமை

## ஆய்வுகள் தெரிவிப்பு

யிலான ஆளும் தொழிற்கட்சியானது இவ்வாறு பின்னடைவை சந்தித்துள்ளமைக்கான பிரதான காரணம், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வரி விதிப்பு முறைகளே என்று கருதப்படுகின்றது.

அவுஸ்திரேலியாவில் தேர்தல் நடைபெறும் திகதி இன்னும் அறிவிக்கப்படாத போதிலும் இந்த வருடம் முடிவடைவதற்கிடையில் தேர்தல் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா விபரங்கள்

✱ ஐக்கிய நாடுகள் (ஐ.நா) சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் யார்?
-கொஃபி அனான்

✱ கொஃபி அனான் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
-கானா



✱ ஐ.நா வின் தற்போதைய பொதுச் செயலாளர் யார்?
பான் கீ மூன். 2007 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து இப் பதவியில் இருக்கின்றார்.



✱ பான் கீ மூன் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
- தென்கொரியா

✱ ஐ.நா.வின் செயலாளர் பதவியை வகிப்பதற்கு முன்னர் பான் கீ மூன் எந்தப் பதவியை வகித்தார்?
-தென்கொரியாவின் வெளியுறவு அமைச்சராக

✱ UNSC என்பதன் விரிவான விளக்கம் என்ன?
- United Nations Security Council
(ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை)



✱ UNSC யில் 5 நாடுகள் நிரந்தர உறுப்புரிமை பெற்றுள்ளன. அந்த நாடுகள் எவை?
1. சீனா
2. பிரான்ஸ்
3. ரஷ்யா
4. பிரிட்டன்
5. ஐக்கிய அமெரிக்கா







இந்த ஐந்து நாடுகளுக்கும் விசேட அதிகாரமொன்று உள்ளது. அந்த அதிகாரம் 'வீட்டோ' அதிகாரம் என்றழைக்கப்படுகின்றது. ஐ.நா வினால் கொண்டுவரப்படுகின்ற எந்தவொரு தீர்மானமும் இந்த ஐந்து நாடுகளினதும் ஏகோபித்த ஆதரவைப் பெற்றால் மட்டுமே அதனை நிறைவேற்ற முடியும். இதில் ஏதேனும் ஒரு நாடேனும் 'வீட்டோ' அதிகாரத்தைப் பாவித்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விடும்.





✱ UNGA என்பதன் விரிவாக்கம் என்ன?
United Nations General Assembly
(ஐக்கிய நாடுகள் பொதுச்சபை)



ஐ.நாவின் இதயப் பகுதி என்று இந்த பொதுச்சபை கருதப்படுகின்றது. பாதுகாப்புச் சபையில் 5 நிரந்தர உறுப்பு நாடுகள் இருப்பது போலவே இதிலும் 10 தற்காலிக உறுப்பு நாடுகள் இடம்பெற்றிருக்கும். இந்த நாடுகள் UNGA மூலமே தெரிவுசெய்யப்படும். இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை இந்த உறுப்பு நாடுகள் தெரிவு செய்யப்படும்.

✱ ஐ.நா பாதுகாப்புச் சபையில் நிரந்தரமற்ற உறுப்புரிமையை (வாக்களிப்பின்மூலம்) பெற்ற ஒரே நாடு எது?
-வியட்நாம். 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நிரந்தரமற்ற உறுப்புரிமையைப் பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வொலிபோள் போட்டி வாய்ப்பு




இந்த வருடத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வொலிபோள் போட்டிகள் நான்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை இலங்கை வொலிபோள் அணி பெற்றுள்ளதாக இலங்கை வொலிபோள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, செப்டெம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெறவுள்ள 15 ஆவது ஆசிய கனிஷ்ட ஆடவர் வொலிபோள் போட்டிகள், செப்டெம்பர் 12 தொடக்கம் 20 வரை வியட்னாமில் நடைபெறவுள்ள மகளிர் வொலிபோள் போட்டிகள், நொவெம்பரில் ஓமானில் நடைபெறவுள்ள ஆசிய கரையோர வொலிபோள் போட்டிகள், மீண்டும் டிசம்பரில் நடைபெறவுள்ள ஆசிய கரையோர வொலிபோள் போட்டிகள் ஆகியவற்றிலேயே இலங்கை அணி கலந்து கொள்ளவுள்ளது.

இந்த மாதம் (ஜூன்) இந்தியாவில் நடைபெறுகின்ற வொலிபோள் பயிற்றுனர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து வொலிபோள் பயிற்றுனர்கள் ஆறு பேர் இந்தியா செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் உபதலைவராக சல்மன் பட்



இலங்கையில் ஆரம்பமாகியுள்ள ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளிலும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டித்தொடரிலும் கலந்துகொள்கின்ற பாகிஸ்தான் அணியின் உபதலைவர் பதவிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சல்மன் பட் நியமிக்கப் பட்டுள்ளார்.

27 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 3 சதங்களையும் 8 அரைச்சதங்களையும் பெற்று 1548 மொத்த ஓட்டங்களை இவர் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 76 ஒருநாள் போட்டிகளில் கலந்துகொண்டு 2651 ஓட்டங்களையும் பெற்றுள்ள சல்மன் பட் ஒருநாள் போட்டிகளில் 8 சதங்களையும் 13 அரைச்சதங்களையும் பெற்றுள்ளார்.

தம்புள்ள ரங்கிரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண போட்டிகளின் பின்னர் பாகிஸ்தான் அணி இங்கிலாந்தில் 6 டெஸ்ட் போட்டிகளிலும் 2 டுவென்டி டுவென்டி போட்டிகளிலும் கலந்து கொள்கின்றது.

# பகிரங்க டென்னிஸில் நடால் செம்பியன்



பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் ஸ்பெய்ன் வீரரான ரஃபாயல் நடால் வெற்றியீட்டி செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

பிரான்ஸில் நடைபெற்ற மேற்படி இறுதிப் போட்டியில் சுவீடன் நாட்டைசேர்ந்த ரொபின் சொடர்லிங்க என்பவரை எதிர்த்தாடியபோதே 6-4, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் நடால் வெற்றியீட்டினார். ஐந்தாறு தடவையாக நடால் இந்த செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றிகளையடுத்து டென்னிஸ் தரப்படுத்தல் பட்டியலிலும் முதல் நிலை வீரர் என்ற நிலைக்கு முன்னேறியுள்ள அதேவேளை, முதல்நிலையிலிருந்த சுவிட்ஸர்லாந்தின் ரொஜர் ஃபெடரர் இரண்டாவது நிலைக்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

# கவனத்தை ஈர்த்துள்ள கால்பந்தாட்ட வீரர்கள்

19 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் தென்ஆபிரிக்காவில் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளது. போட்டிகளை காணச்சென்றுள்ள நேரடிப் பார்வையாளர்களைத் தவிர, லட்சக்கணக்கான ஏனையவர்கள் உலகம் பூராவும் தொலைக்காட்சியின் வழியே ஒரு மாதத்திற்கு இந்த கால்பந்தாட்ட திருவிழாவை கண்டுகளிக்கவுள்ளனர்.

இதேவேளை, இம்முறை கால்பந்தாட்டப் போட்டிகளில் புதிய சில வீரர்கள் உலகின் கவனத்தை ஈர்க்கும் நட்சத்திரங்களாக மிளிரக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. எனினும், ஏற்கனவே கால்பந்தாட்ட ரசிகர்களின் ஏகோபித்த கவனத்தை ஈர்த்த சில உச்ச நட்சத்திர வீரர்கள் இம்முறை எத்தகைய வகையில் திறமைகளை வெளிப்படுத்துவர் என்பதை அறியும் ஆவலில் ரசிகர்கள் உள்ளனர். அந்த வரிசையில் உள்ள சில வீரர்களைப் பற்றி ஆராய்வோம்.

*** ரிக்கார்டோ கக்கா (Ricardo Kaka)**

பிரேஸில் நாட்டவரான இவர் இந்த வருடத்தில் மட்டுமன்றி கடந்த வருடத்திலும் சர்வதேச மட்டத்திலான போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

*** கிறிஸ்டியானோ ரொனால்டோ (Cristiano Ronaldo)**

இவர் போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்தவராவார். உலகிலேயே அதிமிகு ஜனரஞ்சகத்தைப் பெற்றுள்ள இவர், பல தடவைகள் விருதுகள் பல பெற்றுள்ளதுடன் கூடிய அளவில் பணம் சம்பாதிக்கும் கால்பந்தாட்ட வீரராகவும் கருதப்படுகின்றார்.

*** வேன் ரூனி (Wayne Rooney)**

இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இங்கிலாந்து இம்முறை கிண்ணத்தை வெற்றி கொள்வதற்கு அதிகளவாக இவர்மீது நம்பிக்கை வைத்துள்ளது. கடந்தமுறை உலகக் கிண்ணப் போட்டிகளின்போது இங்கிலாந்து ரசிகர்கள் டேவிட் பெக்கெம் மீது வைத்திருந்த நம்பிக்கையை இம்முறை ரூனி மீது வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

*** லயனல் மெஸ்ஸி (Lionel Messi)**

ஆர்ஜன்டினா நாட்டவர். 22 வயதான இவர் மீதே ஆர்ஜன்டினா மிகுந்த நம்பிக்கையை வைத்துள்ளது. உலகக் கிண்ணத்திற்கான தகுதிகாண் போட்டிகளின் போது ஆர்ஜன்டினா வெற்றி பெற்று தகுதி கண்டதில் லயனல் மெஸ்ஸியின் பங்களிப்பு அதிகளவில் இருந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அணியின் பயிற்றுனரான மெரடோனாவின் எதிர்பார்ப்பிற்குரியவராகவும் மெஸ்ஸி உள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

*** மிரோஸ்லொவ் க்ளோஸ் (Miroslav Klose)**

ஜேர்மனி நாட்டைச் சேர்ந்தவர் இவர். இறுதியாக நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டியில் ஜேர்மனி சார்பாக கூடுதலான அளவில் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார். வயதில் கூடியவராக இருந்தபோதிலும் அனுபவத்தில் முழுமை பெற்றவராவார்.







# பாடசாலைப் பிள்ளைகள் தனியார் வாகனங்களில் செல்வது நல்லதா? கூடாதா?




*(கடந்த வாரத்தொடர்ச்சி....)*

தம் குழந்தைகளின் பாதுகாப்பு, நலன் இவற்றைக் கருத்தில்கொண்டு அநேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை தனியார் வாகனங்களில் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். ஆனால், 'வேலியே பயிரை மேய்கிறது' என்பது போல் தனியார் வாகனங்களில்தான் அம்மாணவர்களுக்குப் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. கடத்தப்படுத்தல், வன்முறைகள், துஷ்ப்பிரயோகங்களுக்கு உட்படுபடுதல் இத்தனியார் வாகனங்களிலேயே நிகழ்கின்றன. ***-ராஷியா ஆப்தீன், துல்ஹிரிய.***

தனியார் வாகனங்களில் செல்வதனால் மிக விரைவில் பாடசாலைக்குச் சென்றுவிடலாம். இதனால், பாடசாலை மாணவர்கள் தனியார் வாகனங்களில் செல்வது நல்லது. ***-எம்.ஜெயகலா, பூனாகலை.***

பாடசாலைச் சேவைக்கு என இன்று தனியார் வாகனங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் பெற்றோர்கள் இச்சேவை பிள்ளைகளுக்குப் பாதுகாப்பாக இருக்கிறதா? இல்லையா? என்பதை நன்கு அறிந்து அனுப்பினால் நல்லது. எனவே, பாடசாலைப் பிள்ளைகள் தனியார் வாகனங்களில் செல்வதில் தவறில்லை. ***-எம்.றாஸிக், அ/மனாருல் உலூம் ம.வித்.,***

சா/தர, உ/தர வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் உண்மையில் தனியார் வாகனங்களில் செல்வது அவசியமில்லை. ஏனென்றால், அவர்கள் உடல் வலிமையும் சாதாரணமாகத் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக் கூடியதுமான ஆற்றலும் காணப்படும். ஆனால், சிறிய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தனியார் வாகனங்களில் செல்வது மிகவும் பாதுகாப்பானதாகும். ஏனென்றால், அவர்களுக்கு பாடசாலை செல்லும்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் அளவுக்கு அனுபவ முதிர்ச்சி காணப்படாது. ஆதலால் பிள்ளைகள் தனியார் வாகனங்களில் செல்வது நல்லதாகும். ***-பாதுக்கை வாசகன்***

மாணவர்கள் தனியார் வாகனங்களில் செல்வது சரியானதாகத் தோன்றவில்லை. ஏனெனில், இன்று தனியார் வாகனங்களில் செல்லும் மாணவர்கள் கடத்தல், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவதனை பத்திரிகைகளினூடாக அறிவீர்கள். இதனைப் பெற்றோர்கள்கூடப் பொருட்படுத்தாமல் இருக்கிறார்கள். எனவே, பிள்ளைகளைத் தனியார் வாகனங்களில் அனுப்புவதை நான் முற்றுமுழுதாக வெறுக்கிறேன். ***-என்.நஸ்ஹறா நியாஸ், திக்குவல்லை.***

தனியார் வாகனங்களில் மாணவர்கள் செல்லும்போது குறிப்பிட்ட ஒரு வாகனத்தில் பல பாடசாலை மாணவர்கள் செல்வதாலும் வாகனம் எல்லா இடங்களுக்கும் செல்வதாலும் மாணவர்களின் நேரம் வாகனத்தில் வீணாக்கப்படுகிறது. பாடசாலை முடிந்தவுடன் வீட்டிற்கு வரமுடிவதில்லை. எனவே, மாணவர்கள் தனியார் வாகனத்தில் செல்வது நல்லதல்ல. ***-ஹிமாஸா ஏ.வாஹிட், மல்வானை.***

தனியார் வாகனங்களில் பிள்ளைகளுக்கு என்னென்ன நடக்கின்றன என்பதை பல பெற்றோர்கள் அறிவதில்லை. வாகன ஓட்டுனர்கள் தமது வாகனத்தில் பயணம் செய்யும் பிள்ளைகளை அதட்டுவது, பயமுறுத்துவது, அவமதித்துப் பேசுவது ஆகியனவும் நடக்கின்றன. பாசத்துடன் வளர்க்கப்படும் பிள்ளையை சம்பந்தமில்லாத இன்னொருவர் இவ்வாறு நடத்துவதற்கு நீங்கள் இடம் கொடுக்கத்தான் வேண்டுமா? ***-சுகந்தன், மட்டக்குளி.***


அரை மணித்தியால தூரத்திலுள்ள பாடசாலைக்குக்கூட சில பிள்ளைகள் வேனில் செல்வதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னமே அதிகாலையில் வேனில் ஏற்றப்படுகின்றனர். அனைத்து இடமும் சுற்றிவிட்டு பாடசாலைக்குச் செல்லும்போது அவர்கள் தூங்கிவிடுகின்றனர். மிகுந்த சோர்வை அடைகின்றனர். எனவே தனியார் வாகனங்கள் பொருத்தமற்றது. ***-சுகன்யா, பொரல்லை.***

இந்த வாரத் தலைப்பு :
**'ஆசிரியர் மாணவர்களை தண்டிக்கலாமா?'**
சுருக்கமாக தபாலட்டையில் எழுதுங்கள்.

விவாத மேடை,
'விஜய்',
த.பெ.இல 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவில் தரையிறங்கவுள்ள 'SMART 1'



நிலவு தொடர்பான ஆராய்ச்சியில் அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையம்தான் ஆரம்பத்திலிருந்தே அதிக ஈடுபாடு காட்டிவந்தது. எனினும், கடந்த 30 ஆண்டுகளாக நிலவைப் பற்றிய ஆய்வுகள் எதுவும் நடைபெறவில்லை. மாறாக, செவ்வாய் மற்றும் பிற கிரகங்களை ஆராயும் முயற்சியிலேயே நாஸா உட்பட ஏனைய விண்வெளி ஆராய்ச்சி மையங்களும் ஆர்வம் செலுத்தின.

இந்த நிலையில் ஐரோப்பிய விண்வெளி ஆய்வுமையம் (ESA) 'ஸ்மார்ட் 1' (SMART 1) என்ற பெயரில் ஒரு செயற்கைக்கோளை ஏரியான் 5 ரொக்கெட் மூலம் 2003 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி நிலவுக்கு அனுப்பியது. 'SMART 1' என்பதன் விரிவாக்கப் பெயர் Small Mission for Advance Research Technology என்பதாகும்.

நீள் வட்டப்பாதையில் நிலவைச் சுற்றி வந்த இந்த செயற்கைக்கோள்,அப்போது நிலவு பற்றிய பல்வேறு ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டது. தற்போதளவில் நிலவின் தரைப்பகுதியையும் அதன் துருவப் பகுதியில் பனிப்பொழிவு இருக்கும் தன்மை ஆகியவை குறித்தும் ஸ்மார்ட் 1 ஆய்வுகளை நடத்திக்கொண்டிருக்கிறது. இந்த ஆய்வுகளின் உச்சக்கட்டமாக ஸ்மார்ட் 1 செயற்கைக்கோளை நிலவின் மீது மோதச் செய்து, ஆய்வுகளை மேற்கொள்ளவும் விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி, நிலவின்மீது ஸ்மார்ட் 1 இறங்கும் நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 1 அல்லது 2 ஆம் திகதி நடக்க இருக்கிறது.அதற்கு முன்னர் நிலவு தொடர்பாக தற்போதளவில் மேற்கொள்ளப்படுகின்ற சகல ஆய்வுகளையும் நிறைவு செய்துவிட விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். அதேவேளை, இந்த ஆய்வுகளின் ஒரு கட்டமாக இம்மாதம் ஸ்மார்ட் 1 செயற்கைக்கோள் நிலவுக்கு மிக அருகில் அதாவது, 300 கிலோமீற்றர் தூரம் வரை நெருக்கமாகச் சென்று, நிலவின் தரைப் பகுதியை ஆய்வு செய்யவுள்ளது.




நிலவின் மீது குறித்த செயற்கைக்கோள் இறங்கும் நிகழ்வு 15 மணி நேரம் நடைபெறும். இதன் போது ஸ்மார்ட் 1, மணிக்கு 5 ஆயிரம் மைல் வேகத்தில் நிலவை நோக்கி இறங்கும். அது நிலவை நெருங்கும்போது செயற்கைக்கோளில் உள்ள நவீன கெமராக்கள் நிலவின் தரைப் பகுதியை படம் பிடித்து உடனுக்குடன் பூமிக்கு அனுப்பி வைக்கும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். இந்தப் படங்கள் அதிக தெளிவாகவும் நிலவின் தரைப்பகுதி பற்றிய முழு விபரங்களையும் அறிந்துகொள்வதற்கு பெரும் உதவியாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது.

சுமார் 285 கிலோ எடை உள்ள ஸ்மார்ட் 1, நிலவின்மீது மோதும்போது அந்த இடத்தில் ஏற்படக்கூடிய தூசுப்படலம், தரையின் கடினத் தன்மை, மண்ணில் கலந்திருக்கும் ரசாயனப் பொருட்கள் என்பனவற்றின் விகிதங்கள் போன்றவற்றையும் ஆராய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# செவ்வாயில் 520 நாட்கள்






**செவ்வாய்க் கிரகத்தை நோக்கி ஆறு பேருடனான விண்கலம் ஒன்றை அனுப்ப ரஷ்யா திட்டமிட்டுள்ளது. அதற்கான வேலைகள் தற்போதளவில் மும்முரமாய் நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இந்த விண்வெளிப் பயணத்திற்காக மூன்று ரஷ்ய விண்வெளி வீரர்களும் கொலம்பிய வீரரொருவரும் பிரெஞ்ச் விண்வெளி வீரர் ஒருவரும் சீன விண்வெளி வீரர் ஒருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.**

**இந்த ஆறு விண்வெளி வீரர்களும் 520 நாட்கள் செவ்வாய்க் கிரகத்தில் தங்கியிருந்து அதன் சுற்றுப்புற சூழல் மனிதனுக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதனை ஆராயவுள்ளனர்.**

# மகளின் கேள்விக்கு விடைதேடிய தாய்


தனது கணவர் மற்றும் மகளுடன்

**சுட்டிக் குழந்தைகள் கேட்கும் கேள்விகள் சிலவேளை நம்மைச் சிந்திக்கவும் திகைக்கவும் வைக்கும். அந்த அளவுக்கு அவர்களின் புத்திக்கூர்மை பரிணாம வளர்ச்சி அடைந்திருக்கிறது. இதற்கு சிறந்ததொரு உதாரணமாக, தன் மகள் கேட்ட கேள்வியால் திக்குமுக்காடிய விண்வெளி வீராங்கனை தனது விண்வெளிப் பயணத்தின்போது அதற்கான விடையைத் தேடிய சம்பவத்தைக் குறிப்பிடலாம்.**

**ஜப்பானிய விண்வெளி வீராங்கனை யமசாகி. அண்மையில் டிஸ்கவரி விண்கலத்தில் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்றுவந்த 4 பெண் விஞ்ஞானிகளில் ஒருவர். இவரது ஏழு வயது மகள் யூகி, தன்னிடம் கேட்ட கேள்விக்கான ஆய்வை யமசாகி விண்வெளி மையத்தில் மேற்கொண்டு, அதற்கான விடையையும் கண்டறிந்தார்.**

**சிறுமி யூகி கேட்ட கேள்வி இதுதான், "அம்மா, நிறமுள்ள சவர்க்காரத்தை நீரில் கரைத்தால் எப்படி வண்ணமற்ற குமிழ்கள் வருகின்றன?". இதற்காக விண்வெளியில் சிவப்புநிற பழ ஜூஸுடன் சவர்க்காரத்தை சேர்த்து யமசாகி ஆய்வு செய்தார். அப்போது சிவப்பு நிற சவர்க்காரக் குமிழ்கள் உருவாகின. விண்வெளியில் ஈர்ப்பு விசையற்ற நிலையில் சோதனை**


விண்வெளி மையத்தில் ஆய்வில் ஈடுபடும் யமசாகி

**செய்யப்பட்டதால்தான் நிறம் இவ்வாறு சவர்க்காரக் குமிழ் முழுவதும் பரவுகிறது என்று இதன்போது அறிய முடிந்தது. ஆகவே, சவர்க்காரக் குமிழுக்கு புறச்சேர்க்கை மூலமே நிறம் கிடைக்கிறது என்பது தெளிவானது.**

**இந்த ஆய்வை யூகி தனது தந்தையுடன் பூமியில் இருந்து வீடியோ ஃபோன் மூலம் பார்த்து ரசித்தாள். யமசாகியின் கணவரும் ஒரு விண்வெளி வீரர். அவர்தான் விண்வெளியில் இந்த பரிசோதனையை மேற்கொள்ள யமசாகிக்கு ஆலோசனை கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.**

# வெள்ளியிலும் ஆராய்ச்சி நடைபெறுகின்றதா?


மெகலன் விண்கலம்


வீனஸ் எக்ஸ்பிரஸ் விண்கலம்

1961 முதல் 2008 வரை 25 இற்கும் மேற்பட்ட விண்கலங்கள் வெள்ளிக் கிரகத்துக்கு அனுப்பப்பட்டன. இவற்றில் வெள்ளியில் தரையிறங்கி ஆராய்ச்சிகளை மேற்கொண்ட விண்கலங்கள் ஒரு சிலவே. 1939 இல் அமெரிக்கா அனுப்பிய மெகலன் விண்கலமும் 2005 இல் ஐரோப்பிய விண்வெளி அமைப்பு அனுப்பிய வீனஸ் எக்ஸ்பிரஸ் விண்கலமும் வெள்ளியில் மேற்கொண்ட ஆராய்ச்சிப் பணிகள் குறிப்பிடத்தக்களவு வெற்றி பெற்றன.

1984 ஆம் ஆண்டு வரை வெள்ளிக்கு அடுத்தடுத்து 20 விண்கலங்களை அனுப்பி, வெற்றி பெற்றது ரஷ்யா. 1991 இற்குப் பின்னர் அந்நாட்டின் விண்வெளித் திட்டங்களுக்கு நிதி கிடைப்பதில் பிரச்சினை ஏற்பட்டதன் காரணமாக, வெள்ளி நோக்கிய அதன் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டன. எனினும், நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 2016 இல் வெள்ளிக் கிரகத்துக்கு விண்கலம் ஒன்றை அனுப்ப ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுக

1





## இணைக்க 5

| | |
|---|---|
| 1. CMXCIX | a. 1900 |
| 2. MCM | b. 990 |
| 3. CMXC | c. 999 |





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.06.23 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 265**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## விடை தருக 4

1 'பொற்கோபுர நாடு' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் நாடு எது?

.................................................

2. 'ஐரோப்பாவின் போர்க்களம்' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் நாடு எது?

.................................................

3. 'கடல்களின் அரசி' எனும் சிறப்புப் பெயர் பெற்றுள்ள நாடு எது?

.................................................

4. 'ஈடனின் தோட்டம்' என்ற சிறப்புப் பெயர்கொண்ட நாடு எது?

.................................................


(இங்கிலாந்து/மியன்மார்/பெல்ஜியம்/இலங்கை)

## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைக்க 3




## நேரங்களைக் குறித்துக் காட்டுக 2







## அறிவுக்கு விருந்து 262 விடைகள்

**போட்டி: 02**




**போட்டி: 03**




**போட்டி: 04**

1. விஞ்ஞானி
2. நோயாளி
3. குற்றவாளி

**போட்டி: 05**

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார் அஃதுஅறி கல்லா தவர்.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 262 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.முஃப்லீன்,
தரம் - 7[H], மட்/அல்-ஹிறா வித்., காத்தான்குடி.

**போட்டி: 02**
க.நிரோஜினி,
தரம் - 9, நுகேகொடை த.ம.வித்., நுகேகொடை.

**போட்டி: 03**
எம்.இஹ்ஸான்,
தரம் - 2, மாளிகாஹேன மு.ம.வித்., பேருவளை.

**போட்டி: 04**
லிபார் இப்ஹாம்,
தரம் - 7, குளி/காசிம் மு.வித்., திவுரும்பொல.

**போட்டி: 05**
ப.பிரணவன்,
தரம் - 8[A], யாழ்ப்பாணக் கல்., வட்டுக்கோட்டை.

### பாராட்டுப் பெறுவோர்:

- எஸ்.ஹார்தி, கந்தப்பொல, நுவரெலியா.
- எச்.முனாசிக், தரம்-5, அல்-அஷ்ஹர் வித்., வரிப்பத்தான்சேனை-02.
- ஜே.ஜே.சார்ள்ஸ், தரம்-4, மகா ஊவா த.வித்., வலப்பனை.
- எஃப்.ஹஃப்ஷா, தரம்-3, அல்-பதுரியா மு.வித்., கஹகொல்ல.
- எம்.ஃபஸ்லான், கள்-எளிய.
- வி.அன்ரன் றெஜினோட், பெரிய கோமரசன்குளம், வவுனியா.
- எம்.எல்.ரினாஸ், தரம்-9[B], ஸாஹிரா கல்., மாவனல்லை.
- எஃப்.முஸ்னா, தரம்-6[A], நு/அல்-மின்ஹாஜ் தே.பாட., ஹபுகஸ்தலாவை.
- ந.வதனி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
- எம்.ஹம்தி, தரம்-10[A], எனசல்கொல்ல மத்.கல்., தெல்தொட்ட.

## விஜய் வாசகர் மடல்



'ஞாபகமறதி' எனும் கட்டுரை மிகவும் சிறப்பாகவும் நடைமுறையில் மாணவர்கள் அதனை செயற்படுத்தக்கூடிய வகையிலும் விளக்கியிருந்தமை மிகநன்று. ஓவியம் வரைவது எப்படி? என்ற தொடர் பாடநெறி ஓவியமே வரையத் தெரியாத என்னைக்கூட வரையத் தூண்டியதோடு, இதனால் பலரும் நன்மையடைவர்.

**-சி.தபோதினி, பிரதான வீதி, வடலியடைப்பு, யாழ்ப்பாணம்.**

'தெரிந்து கொள்ளுங்கள்' என்ற பகுதி எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது. கேள்விகள் கொஞ்சமாக இருந்தாலும் நல்ல பயனைத் தரக்கூடிய வகையில் இருக்கின்றது.

**-ஹஸ்கா பானு, தரம்-10[B], நாச்சியாதீவு மு.ம.வித்., நாச்சியாதீவு.**

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் என் பிள்ளைகளை மட்டுமன்றி என்னையும் கவர்ந்திழுக்கின்றன. குறித்த இதழில் பிரசுரமான விண்வெளித் தகவல்களும் தலசீமியா நோய் பற்றிய செய்தியும் அலாஸ்காவின் அதிசயங்களும் எனக்குப் பிடித்தமானவை. 'விஜய்'க்கு நிகர் எதுவுமில்லை.



**-திருமதி.இராஜேந்திரன் மகாலட்சுமி, புதிய ஒழுங்கை, நோர்வூட்.**

அறிவுசார் விடயங்களை வியத்தகு முறையில் பிரசுரிப்பது பாராட்டுக்குரியது. 'அவதார்' கட்டுரை எமது அறிவுக்கு விருந்தாக இருந்தது. பிரபல்யமான நாவலாசிரியர்கள் பற்றிய விடயங்களையும் பிரசுரிக்கவும்.

**-ராஜ் தீபநதி, மன்றாசி தோட்டம், அக்கரப்பத்தனை.**

'அலாஸ்காவின் அதிசயங்கள்' முதல் 'அவதார்' திரைப்படம் வரை பல்வேறு தகவல்களை சுமந்து வந்ததற்குப் பாராட்டுக்கள்.விஞ்ஞானிகள் பற்றிய கட்டுரைகளையும் பிரசுரிக்குமாறு வேண்டுகின்றேன்.

**-என்டன் ஜோர்ஜ், இன்போட் எஸ்டேட், பொகவந்தலாவ.**

***★ தொடர்ச்சியாக இல்லாவிடினும்; விஞ்ஞானிகள், நாவலாசிரியர்கள் பற்றிய விடயங்கள் விஜய்யில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இனிவரும் இதழ்களிலும் பிரசுரமாகும். தொடர்ந்தும் இணைந்திருங்கள். (ஆ-ர்)***

மொத்தத்தில் 'விஜய்' பத்திரிகை ஒரு பல்கலைக்கழகம்.

**-க.ஹரிகரசர்மா, தரம்-9[A], ஹாட்லிக் கல்., பருத்தித்துறை.**

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'ஓவியம் வரைவோம்' என்ற பகுதியால் அனைத்து மட்ட மாணவர்களும் பிரயோசனம் அடைவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**-எச்.எம்.ஜில்ஸாத், ஷரஃபிய்யா அ.கல், மதவாக்குளம்.**

'ஓவியம் வரைவோம்' தொடர் மாணவர்களின் வரைதல் திறமையை வெளிக்காட்ட உதவுகின்றது. 'அற்லஸ் அறிவுக்கு விருந்து', 'அற்லஸ் வழியே உலகைக் காண்போம்' ஆகியவை மாணவர்களின் அறிவைப் பரிசோதிப்பதில் முன்நிற்கின்றன.

***-எம்.ஏ.எஃப்.பஸ்னா, மின்ஹாத் தே.பாட., மாத்தறை.***

'விஜய்' பத்திரிகையை பார்ப்பதற்கும் படிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் இக்கால இளையவர்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள்! 'விஜய்' வாசகர்கள் எதிர்காலத்தில் பல்துறைகளிலும் அதிசிறந்து விளங்குவர் என்பது நூறு வீதம் நிச்சயம். எமது காலத்தில் இப்படியொரு சிறப்பான, பயனுள்ள பத்திரிகை இருக்கவில்லையே என்பதில் எனக்கொரு சிறு வருத்தம். விருப்போடு வாழ்த்துக்கள்.

***-கோட்டைமுனை ஏ.குத்தூஸ் (ஊடகவியலாளர்), பதுளை.***

இந்த இதழில் (16.06.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 23.06.2010.



**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் இடம்பெற்ற கொல்லிமலை

இயற்கை ரசிகர்களைக் கவரும் பகுதியாகவும் மற்றும் புனித பகுதியாகவும் திகழ்கிறது இந்தியாவிலுள்ள கொல்லிமலை.

இங்கு அரப்பலீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளதாலேயே இது ஒரு புனித யாத்திரைப் பகுதியாகவும் விளங்குகிறது. இந்த ஆலயத்திலிருந்து ராசிபுரத்திலுள்ள சிவன் கோவிலுக்கு ரகசிய மார்க்கம் இருப்பதாகவும் நம்பப்படுகிறது. கொல்லிமலையிலிருந்து சரியாக 54 கிலோமீற்றர் தூரத்திலேயே ராசிபுரம் உள்ளது. இந்த சிவன் கோவில் முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆட்சிபுரிந்த வல்வில் ஓரி என்பவரால் கட்டப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

அரப்பலீஸ்வர சதக்கம் என்பது அரப்பலீஸ்வரரைப் போற்றிப்பாடும் ஒரு பாடல் தொகுதியாகும். இந்த ஆலயம் சங்ககாலம் முதல் இங்கு இருப்பதாக நம்பப்படுகின்றது.

இந்த மலைப்பகுதியில் அரசு மூலிகைத்தோட்டமொன்றையும் உருவாக்கியுள்ளது. ஓகஸ்ட் மாதத்தில் உல்லாசப் பயண விழாவொன்றும் நடத்தப்படுகிறது. இயற்கையை ரசிப்பவர்களின் முக்கிய இடமாகவும் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த மற்றும் தியான, யோக பயிற்சிகளுக்குப் பொருத்தமான இடமாகவும் இப்பகுதி திகழ்கிறது.



படகு சவாரி ஏரி

மாவட்ட நிர்வாகம் அண்மையில் தாவர தோட்டம், படகுவீடு, குகை வீடு, நீர்வீழ்ச்சி என்பனவற்றை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டது. அத்துடன், 'ஓரி' பண்டிகையை பல்வேறு கலாசார அம்சங்களுடன் கொண்டாடியது. இங்கு வருகை தருவோரின் வசதிக்காக விடுதிகள், உணவகங்கள் என்பனவும் உள்ளன.

இம்மலைகளின் அடிவாரத்தில்




சிறிய மற்றும் பெரிய பட்டினங்களும் உள்ளன. நாமக்கல், செந்தமாங்கலம், கலப்ப நாய்க்கன்பட்டி, சிங்கலந்தபுரம், ராசிபுரம், நாமகிரிபேட்டை, துறையூர், புளியஞ்சோலை என்பன அவற்றில் சிலவாகும். பண்டைய இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு போன்றவற்றில் கொல்லிமலை பற்றி கூறப்பட்டுள்ளது.

இப்பிராந்தியத்தை கி.மு 200 ஆம் ஆண்டளவில் ஆட்சி புரிந்த வல்வில் ஓரி கடையேழு வள்ளல்களில் ஒருவராகவும் போற்றப்படுகின்றார். இவருடைய பராக்கிரமம் பற்றியும் அம்பு எய்யும் ஆளுமை பற்றியும் பல கவிஞர்கள் பாடியுள்ளனர். வல்வில் ஓரி ஓர் அம்பினால் ஒரு சிங்கம், கரடி, மான், பன்றி என்பனவற்றைக் கொன்றதாகவும் சொல்லப்படுகின்றது. இறுதியில் மலையமானுடன் நடந்த யுத்தத்தில் வீர மரணம் அடைந்தாராம்.


இந்த கொல்லிமலை உள்ளூர் தெய்வமான கொல்லிப்பாவையினால் பாதுகாக்கப்படுவதாகவும் நம்பப்படுகின்றது. புராண நிகழ்வுகளின்படி முனிவர்கள் தவம் செய்வதற்குப் பொருத்தமான இடமாக கொல்லிமலையை தெரிவு செய்தார்களாம். இதை அறிந்த அசுரர்கள் கொல்லி மலையை ஆக்கிரமித்து முனிவர்களின் தவத்தைக் கலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களாம். இதனால், முனிவர்கள் கொல்லிப்பாவையிடம் சரணடைந்து தமது கஷ்டத்தை வெளிப்படுத்தினார்களாம். கொல்லிப்பாவை தனது வசீகரமான புன்னகையால் அசுரர்களை மயக்கி விரட்டியடித்ததாம்.

இந்த கொல்லிப்பாவை மலை இன்னும் பக்தர்களால் பூஜிக்கப்படுவதோடு, அவரின் புன்னகையும் கௌரவமாகப் போற்றப்படுகிறது. இவ்வாறு இந்த கொல்லிமலை பற்றி பல புராணகால நிகழ்வுகள் பேசப்பட்டு வருகின்றன.





கொல்லிமலையிலுள்ள வல்வில் ஓரியின் உருவச்சிலை



கொல்லிமலை நீர்வீழ்ச்சி

## சீனாவின் மஞ்சள் மலை

சீனாவில் உள்ள குறிப்பிடத்தக்க மலைகளில் மஞ்சள் மலை (Yellow Mountain) மிகவும் பிரசித்தி பெற்றது. இதற்கு ஹுவாங்ஷன் (Mt.Huangshan) மலையென்றும் ஒரு பெயருண்டு. இந்த மலை சீனாவின் அன்ஹுய் மாகாணத்தின் தென்பகுதியில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் இஷான் மலை (Mt.Yishan) என்று அழைக்கப்பட்ட இந்த மலை 747 ஆம் ஆண்டில் சீனப் பழங்கதைகளின்படி சீன மக்களின் முன்னோரான ஹுவாங் டி (Huang Di) என்பவரால் 'ஹுவாங்ஷன்' மலை என்று பெயரிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மஞ்சள் சக்கரவர்த்தி (Yellow Emperor) என்று அழைக்கப்படும் ஹுவாங் டி சீனப் பேரரசர் என்றும் கலாசார கதாநாயகன் என்றும் புகழப்படுகிறார்.

சீனாவில் உள்ள முக்கிய மலைகளான சாங்டோன் மாகாணத்திலுள்ள 'டைஷான்' மலை (Mt.Taishan) ஷாங்ஷி மாகாணத்திலுள்ள 'ஷுவாங்ஷன்' மலை (Mt.Huagshan) 'ஹெங்ஷான்' மலை (Mt.Hengshan) ஹெனான் மாகாணத்திலுள்ள 'சொங்ஷான்' மலை (Mt.Songshan) ஹுனான் மாகாணத்திலுள்ள ஹெங்ஷான் மலை (Mt.Hengshan) ஆகியன பொதுவாக 'வூயூ' (Wuyue) என்று அழைக்கப்படுகின்றன. இந்த 'வூயூ' மலைகளைப் பார்த்து ரசித்தவர்கள் வேறு எந்த மலைகளையும் போய் பார்க்க விரும்பமாட்டார்களாம். ஏனெனில், இங்கு பார்க்கவேண்டிய எல்லா அம்சங்களும் உண்டு என்று கூறப்படுகிறது.



ஹுவாங் டி

அதேவேளை, மஞ்சள் மலையைப் பார்த்து ரசித்துவிட்டு வருபவர்கள் 'வூயூ' மலைகளைக் கூடப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட மாட்டார்களாம். அந்த அளவுக்கு முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளதாம் மஞ்சள் மலை. இதிலிருந்து மஞ்சள் மலையின் அழகு மற்றும் அங்குள்ள விசேட அம்சங்கள் பற்றி அறியமுடிகிறது.

மஞ்சள் மலை அதன் பேரழகுக்காக மட்டுமன்றி அங்குள்ள அபூர்வ விலங்குகள் மற்றும் உயிரினங்களுக்காகவும் அது உலக இயற்கை மற்றும் கலாசாரப் பதிவில் இடம்பெற்றுள்ளது.





மஞ்சள் மலை

## 4700 வருட பழைமைமிகு புதைகுழிகள்

எகிப்தின் லாஹுன் பகுதியில் தொல்பொருள் ஆய்வாளர்கள் 45 புராதன புதைகுழிகளை கண்டுபிடித்துள்ளனர். இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ள பகுதி கெய்ரோவுக்கு தெற்கே 70 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. அநேகமான குழிகளில் அலங்கரிக்கப்பட்ட சவப்பெட்டிகள் இருந்தன. ஒவ்வொரு பெட்டிகளிலும் ஒவ்வொரு மம்மிகள் இருந்தன. ஒரு குழியில் கி.மு 1500 ஆம் ஆண்டைச் சேர்ந்ததென நம்பப்படும் 12 சவப்பெட்டிகள் இருந்தன. இவை ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இதன்படி, மொத்தமாக 57 மம்மிகள் அங்கு காணப்பட்டன. இங்கு அகழ்வு நடத்தப்பட்ட குழிகளில் மிகவும் பழைமையானது என நம்பப்படும் குழி கி.மு 2750 ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்று நம்பப்படுகிறது. எகிப்தின் புராதன சமயம் பற்றிய ஆய்வுக்கு இந்த கண்டுபிடிப்புக்கள் மேலும் பல தகவல்களை வழங்கும் என நம்புவதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.





எகிப்திய தொல்லியல் ஆய்வுக்குழுவின் தலைவர் இதுபற்றித் தெரிவிக்கையில்; இங்கு காணப்பட்ட பல மம்மிகள் சணல்நார் துணியில் சுற்றப்பட்டிருந்ததாகவும் அவை புராதன எகிப்தியக் கடவுள்களின் ஓவியங்களைக் கொண்டிருந்ததாகவும் கூறினார். இந்தத் துணிகளில் இறப்புப் பற்றிய புத்தகத்திலுள்ள வாசகங்கள் எழுதப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

புராதன எகிப்தியர்கள் இறப்புப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் தகவல்கள் என்பனவற்றை உள்ளடக்கியதே இந்தப் புத்தகமாகும். சில புதைகுழிகள் சமய வாக்கியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். இக்குழிகளில் ஒன்று ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் முத்திரையிடப்பட்டது. அன்று முதல் தொடப்படாதது என்றும் அவர்கள் தெரிவித்தனர். இந்தக் குழிக்குள் அஸ்தி, கொள்கலன்கள் மற்றும் சணல் துணியால் சுற்றப்பட்ட மம்மியுடனான சவப்பெட்டி என்பனவும் இருந்தனவாம். லாஹுன் பகுதியில் புராதன புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இது முதல் தடவையல்ல. கடந்த வருடமும் இப்பகுதியில் புராதன காலப்பகுதிகளுக்குரிய 53 கற்புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு வருடங்களை பூர்த்தி செய்துள்ள மகளிருக்கான ‘சாரணியர் இயக்கம்’





றொபர்ட் பேடின் பொவெல் (Robert Baden Powell) பிரிட்டனில் புகழ்பெற்ற இராணுவ வீரராவார். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற ‘பூவர்’ என்ற யுத்தத்தில் பிரிட்டன் சார்பாக இவர் போரிட்டார்.

போருக்காக மக்களைத் தயார்படுத்தி பயிற்சிகளை வழங்குவதற்காக பலவிதமான போட்டிகளை இவர் ஏற்பாடு செய்திருந்தார். இந்த யுத்தத்தின் பின்னர் மீண்டும் பிரிட்டனுக்குத் திரும்பிய பொவெல் அவர்கள் சாரணர் இயக்கமொன்றை ஏற்படுத்துவது குறித்து தீவிரமாகச் சிந்தித்தார். அதற்கமைய, ஆண் பிள்ளைகளுக்கென சாரணர் இயக்கமொன்றை அமைப்பது எவ்வாறு சாத்தியப்படும் என்பதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகளில் இறங்கினார். அதன் முன்னோடி நடவடிக்கையாக 1907 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 21 ஆண் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு பிரிட்டனின் ‘மொஸட்’ கரையோரத்தை அண்டிய பிரவுன்ஸி என்ற தீவில் பயிற்சி முகாமொன்றை உருவாக்கினார். இது வெற்றிகரமானதாகவே அமைந்தது. இவ்வாறே சாரணர் அமைப்பின் ஆரம்பம் நிகழ்ந்தது.

## ஆரம்பம் எவ்வாறு நிகழ்ந்தது?




சாரணர் சிந்தனைகளைத் திரட்டி வந்த பொவெல் அவர்கள் ‘சாரணியம்’ தொடர்பில் ஆண்களுக்கான நூலொன்றையும் வெளியிட்டார். பெண் பிள்ளைகளுக்கும் இந்த நூலினை வாசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அன்றைய நாட்களில் பெண்பிள்ளைகள் வீட்டிலிருந்து வெளியே செல்வதற்குக்கூட வாய்ப்பு வழங்கப்படாத நிலை இருந்தது. அந்த நிலையிலும் அவர்கள் தமது வகுப்புக்களில் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து ஆண் சாரணர்கள் செய்கின்ற செயல்களையே தாங்களும் செய்து பழகித் தம்மை ‘பெண் சாரணியர்’ என்று அடையாளப்படுத்திக் கொண்டனர்.

1909 ஆம் ஆண்டில் லண்டன் நகரில் கிறிஸ்டல் பெலஸ் என்ற இடத்தில் சாரணர்களின் ஊர்வலமொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கையில், குறித்த பெண் சாரணியர்கள் ஆர்வமிகுதியால் அந்த ஊர்வலத்தில் அனுமதியின்றி இணைந்து கொண்டனர். இத்தகைய ஆர்வம் மிக்க பெண் பிள்ளைகளுக்காக ஏதேனும் செய்தாக வேண்டும் என்று பொவெல் அவர்கள் தீர்மானித்தார்.

ஆண்களுக்கென சாரணர் இயக்கம் இருப்பது போலவே, பெண்களுக்கெனவும் சாரணியர் இயக்கம் அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட அந்த அமைப்பு இந்த வருடத்துடன் தனது நூறாவது வருடத்தைப் பூர்த்தி செய்கின்றது. 1910 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த மகளிருக்கான சாரணியர் அமைப்பின்பால் உலகிலுள்ள மில்லியன் கணக்கிலான பெண் பிள்ளைகள் ஈர்க்கப்பட்டனர். இத்தகைய சிறப்புமிக்க மகளிர் சாரணியர் உருவான விதம் பற்றிய விபரங்கள் இங்கு வழங்கப்படுகின்றன.



இதற்காக தமக்கு உதவி புரியுமாறு தனது சகோதரியான எக்னஸ்ஸிடம் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மகளிர் சாரணியர்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் ‘கையேடு’ ஒன்றை எக்னஸ் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து மகளிருக்கான சாரணியர் அமைப்பு ஒன்று உதயமாகியது. இதற்கு இந்தியாவில் பணியாற்றிய ‘கைபர் ரைஃபல்ஸ்’ என்ற படைப்பிரிவின் பெயரே சூட்டப்பட்டது. எந்தவொரு வேலைகளையும் உரிய நேரத்தில், உரிய வகையில் சுறுசுறுப்புடன் செய்துமுடிக்கும் பயிற்சியைப் பெற்றிருந்த இந்தப் படைப்பிரிவின் பெயர் இதற்கு மிகவும் பொருத்தமானதாகவே கருதப்பட்டது. ஆரம்ப ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகிபின் 1910 ஆம் ஆண்டில் மகளிருக்கான சாரணியர் இயக்கம் உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஜூன் மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 16, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org